بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّي عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 10

இதழ் 09

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1446 - ஷஅபான் 28 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - தப்லீஃக் 27 ★ 27 பிப்ரவரி 2025

## அல்லாஹ்வின் கட்டளை

يَاَيُّهَا النَّاسُ اعْبُدُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ وَالَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ

**பொருள்**

மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களுடைய இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால் நீங்கள் எல்லா வித ஆபத்துகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளலாம்.

(அல்பக்கரா: 22)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**அஹ்மதிய்யத்தின் தலைமையகம் காதியான் தாருல் அமானில் 129-வது ஆண்டு மாநாடு வெற்றிகரமாகவும் அருளுக்குரியதாகவும் நடந்து முடிந்தது**

**ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் யூ.கே, இஸ்லாமாபாத்தில் இருந்து MTA மூலமாக ஈமானை வலுவூட்டக் கூடிய மாநாட்டு நிறைவுரையை நிகழ்த்தினார்கள்**

## காதியான் ஜல்ஸா 2024 அறிக்கை

### (பாகம் - 4)

### மூன்றாம் நாள் - ஞாயிற்றுக்கிழமை

டிசம்பர் 29, 2024

இதன் பிறகு லண்டனிலிருந்து ஜல்ஸாவின் நிறைவு அமர்வு நிகழ்ச்சி தொடர்பான சிறப்பு ஒளிபரப்பு ஆரம்பமானது. காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடிய நன்மக்களிடத்தில் உருவாகக் கூடிய தூய மாறுதல் தொடர்பாகவும், மேலும் அதே போன்று முழு உலகில் பல்வேறு நாடுகளில் வசிக்கும் ஜமாஅத் உறுப்பினர்கள் காதியானை காண்பதற்காக கொண்டிருக்கும் நல்விருப்பத்தைக் குறித்தும், மேலும், காதியான் ஆண்டு மாநாட்டின் ஈமானை புதுப்பிக்கக் கூடிய காட்சிகள் மற்றும் காதியானின் ஈர்ப்பு மிக்க புனித ஸ்தலங்கள் தொடர்பாகவும் மிகவும் உள்ளத்தைக் கவரக் கூடிய ஓர் ஆவணப் படம் எம்.டி.ஏ பாரத்- சார்பாக எம்.டி.ஏ இன்டர்நேஷனலில் ஒளிபரப்பப்பட்டது. மாநாட்டுத் திடலிலும், மேடையிலும் அமர்ந்திருந்த சகோதரர்கள் மிகவும் கவனத்துடனும், அமைதியுடனும் பார்த்தார்கள்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வருகை தந்ததும் விண் அதிர ஒலித்த தக்பீர் முழக்கங்களுடன் எம்.டி.ஏ இன்டர்நேஷனில் காதியான் ஆண்டு மாநாட்டின் நிறைவு அமர்வின் நேரடி ஒளிபரப்பு ஆரம்பமானது. இந்த சந்தர்ப்பத்தில் டோகோ, மாலி, கினி கனாகரி, நைஜீரியா, கினி பஸாவ், செனிகால், புர்கினாஃபாஸ், அமெரிக்கா வெஸ்ட் கோர் உள்ளிட்ட 8 நாடுகளின் ஆண்டு மாநாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மேலும் தாருல் அமான் காதியான் மட்டுமின்றி இந்த நாடுகளில் நடைபெற்றுக் கொண்டிருந்த மாநாடுகளின் நேரடிக் காட்சிகளும் மீண்டும் மீண்டும் எம்.டி.ஏ இன்டர்நேஷனில் காட்டப்பட்டன.

இந்திய நேரப்படி சரியாக மாலை 4 மணிக்கு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விண்ணை அதிரச் செய்யும் தக்பீர் முழக்கங்களுக்கு மத்தியில் இலண்டனிலுள்ள அய்வானே மஸ்ரூர் வளாகத்திற்கு வருகை தந்தார்கள். ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காதஹு என்ற அன்பளிப்பை வழங்கினார்கள். மதிப்பிற்குரிய நஸீம் பாஜ்வா ஸாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். அன்னார் சூரத்துல் அஹ்ஸாபுடைய வசனங்கள் 39 முதல் 49 வரை ஓதினார்கள். மேலும், அவற்றின் மொழியாக்கத்தையும் வாசித்துக் காட்டினார்கள். அதன் பிறகு மதிப்பிற்குரிய நாஸிர் அலீ ஸாஹிப் உஸ்மான் அவர்கள் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய ஷானே இஸ்லாம் எனும் நூலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதை வரிகளை தமது அழகிய குரலில் பாடினார்கள். அதன் முதல் வரி இதுவாகும்.

ஓ பேஷ்வா ஹமாரா ஜிஸ் ஸே ஹே நூர் ஸாரா நாம் உஸ் கா ஹே முஹம்மது தில்பர் மேரா யஹீ ஹே

சரியாக 4.20 மணியளவில் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சொற்பொழிவு மேடையை அலங்கரித்தவாறு அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்தஹு என்ற அன்பளிப்பை வழங்கியவாறு நிறைவுரையாற்ற துவங்கினார்கள்.

### காதியான் ஆண்டு மாநாட்டின் நிறைவுரை

தஷ்ஷஹுது, தஅவூது, மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த மஸீஹைப் பற்றியும், எந்த மஹ்தியைப் பற்றியும் முன்னறிவிப்பு செய்திருந்தார்களோ அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹும், மஹ்தியும் நானே ஆவேன் என்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதமாகும். மேலும் இனி எந்தவொரு மஸீஹும் விண்ணிலிருந்து வர மாட்டார்; எந்த மஹ்தியும் வரமாட்டார்; ஏனெனில் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகைக்கான காலம் இதுவே ஆகும். இதில் நான் அல்லாஹ் என்னை அனுப்பி வைத்துள்ளான். மேலும் எந்தக் காலத்தைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அடையாளங்களை எடுத்துரைத்திருந்தார்களோ அந்த அனைத்து அடையாளங்களும் இந்தக் காலத்தில் வெளிப்பட்டு விட்டன. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் அடையாளமாக கூறிய அந்த அனைத்து விஷயங்களும் பூர்த்தியாகிவிட்டன என்பதும் அன்னாரின் வாதமாகும். அன்னார் (அலை) உலகிற்கு அழைப்புக் கொடுத்தார்கள். மேலும் குறிப்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளைப் பாருங்கள்; சிந்தியுங்கள் மேலும் இதில் தான் நற்பேறு உள்ளது என்பதை புரிந்து கொள்ளுங்கள் என்று முஸ்லிம்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். அவ்வாறு செய்தால் தான் அது அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதாக அமையும் என்றும் அன்னார் (அலை) கூறினார்கள்.

மேலும் அன்னார் (அலை) கூறினார்கள்:

நான் நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவமதிக்கின்றேன் என்று என் மீது பழிசுமத்தாதீர்கள்; என் மீது சுமத்தப்படும் இந்த குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யான குற்றச்சாட்டு ஆகும் என்பதையும் அன்னார் (அலை) தெளிவுபடுத்தினார்கள். நானோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பனூ ஃபஸாரா படையெடுப்பு & அப்துல்லாஹ் பின் அதீக் படையெடுப்பு மற்றும் மதீனாவில் குழப்பத்தை பரவச் செய்த யூதரான அபூ ராஃபி கொலை செய்யப்பட்ட சூழல்கள் மற்றும் சம்பவங்களைக் குறித்த விளக்கம்**

நான் ஏற்கனவே கூறியது போன்று உம்மு கிர்ஃபா கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் குறித்து சில வரலாற்று நூல்களில் விநோதமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய போதனையின் ஒளியிலும் இஸ்லாமிய அமலின் ஒளியிலும் ஏற்றுக் கொள்ள சாத்தியமற்றதாக அது உள்ளது

ஒரு சமுதாயத்தின் அநீதி, அக்கிரமத்துக்கான சான்று கிடைக்கிறது என்று ஒரு வரலாற்றாசிரியர் ஒரு சம்பவத்தை விட இன்னொரு சம்பவத்திற்கு முன்னுரிமை அளித்து அதை தம் நூலுக்கு அழகூட்டுவதாக ஆக்குகிறார் என்றால் உண்மையில் அந்த வரலாற்றாசிரியர் நடுநிலையான ஆராய்ச்சியாளர் என்று கருதப்படுவதற்கு உரிமையற்றவராக இருக்கின்றார்

இஸ்லாமோ போர்க் களத்திலும் கூட பெண்ணை கொலை செய்வதை விட்டு கடுமையாக தடுக்கின்றது. இதைக் குறித்து பெருமானார் (ஸல்) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். பெண்களை கொலை செய்யக் கூடாது என்று கூறியிருக்கின்றார்கள். ஹதீஸில் வருகின்றது: ஒரு சந்தர்ப்பத்தில் போர்க் களத்தில் ஓர் எதிரி சமுதாயத்தின் பெண் கொலை செய்யப்பட்டு கிடந்தாள். அந்த பெண் எந்த சூழ்நிலையில் யாரால் கொலை செய்யப்பட்டாள் என்று தெரியவில்லை. அவ்வாறிருந்தும் பெருமானார் (ஸல்) அவர்கள் அதைக் கண்டு கடும் கோபமுற்றார்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 10 ஜனவரி 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **10ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ

وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த குத்பாவுக்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த போர்கள் மற்றும் படையெடுப்புகள் பற்றிய குறிப்பு கூறப்பட்டுக் கொண்டிருந்தது. அதில் பனூ ஃபஸாராவுக்கு எதிராக நிகழ்ந்த ஒரு படையெடுப்பை பற்றிய குறிப்பும் இருந்தது. பனூ ஃபஸாராவுக்கு எதிரான போர் நடவடிக்கையில் உம்மு கிர்ஃபா என்பவள் கொல்லப்பட்ட சம்பவமும் வரலாற்றில் காணக் கிடைக்கின்றது. சில வரலாற்று ஆசிரியர்கள் இதை எவ்வாறு எழுதியுள்ளனர் என்றால் அது உண்மைக்கு எதிரான சம்பவம் என்று தெளிவாக வெளிப்படுகின்றது. தபகாத்துல் குப்ராவில் எழுதப்பட்டுள்ளதாவது, ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு வியாபாரத்திற்காக சிரியாவை நோக்கிப் புறப்பட்டார்கள். அவர்களிடம் பெருமானார் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளின் வியாபார பொருட்களும் இருந்தன. அவர்கள் வாதியல் குராவுக்கு அருகில் சென்றடைந்தபோது, பனூ ஃபஸாராவுடைய கிளைக்கோத்திரமான பனூ பத்ர்-ஐ சார்ந்த சில மக்கள் ஸைது பின் ஹாரிஸா அவர்களையும், அவர்களின் தோழர்களையும் அடித்துதைத்தனர்; அவர்களிடமிருந்த பொருட்களை பறித்துக் கொண்டனர். ஸைது (ரலி) அவர்கள் உடல்நலம் தேறிய பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி அந்த சம்பவத்தைப் பற்றி கூறினார்கள். எவர்கள் தாக்குதல் நடத்தினார்களோ அவர்களை நோக்கி பெருமானார் (ஸல்) அவர்கள் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை அனுப்பி வைத்தார்கள். (புறப்பட்டுச் சென்ற) இந்த முஸ்லிம்கள் பகலில் மறைந்து கொள்வார்கள். இரவில் பயணிப்பார்கள். ஆனால், பனூ பத்ர்-க்கு இவர்களைப் பற்றிய செய்தி கிடைத்துவிட்டிருந்தது. பிறகு ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களும் அவர்களின் தோழர்களும் காலை நேரத்தில் அம்மக்களிடம் சென்றடைந்தார்கள். அல்லாஹு அக்பர் என்று முழக்கமிட்டு அங்கிருந்த மக்களை சூழ்ந்து கொண்டனர். உம்மு கிர்ஃபா என்றழைக்கப்பட்ட அப்பெண்ணின் அசல் பெயர் ஃபாத்திமா பின்த் ருஃபா பின் பத்ர் ஆகும். அவளுடைய மகள் ஜாரியா பின்த் மாலிக் பின் ஹுஸைஃபா பின் பத்ர் ஆகும். இவ்விருவரும் கைது செய்யப்பட்டார்கள். பிறகு அந்தப் பெண்ணை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நன்கொடையாக கொடுத்து விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த பெண்ணை ஹஸம் பின் அபீ வஹப் என்பவருக்கு அன்பளிப்பாக கொடுத்து விட்டார்கள்.

நான் ஏற்கனவே கூறியது போன்று உம்மு கிர்ஃபா கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் குறித்து சில வரலாற்று நூல்களில் விநோதமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய போதனையின் ஒளியிலும் இஸ்லாமிய அமலின் ஒளியிலும் ஏற்றுக் கொள்ள சாத்தியமற்றதாக அது உள்ளது. எவ்வாறு இருப்பினும், சில நூல்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

கைஸ் பின் மஹ்ஸர் என்பவர் உம்மு கிர்ஃபா எனும் ஒரு மூதாட்டியை கொல்ல வேண்டும் என்று உறுதி கொண்டார். கைஸ் அவர்கள் மிகவும் கொடூரமாக அவளை கொலை செய்தார். அவளுடைய இரு கால்களையும் கயிறுகளால் பிணைத்து இரண்டு ஒட்டகங்களில் கட்டினார். பிறகு ஒட்டகங்களை விரட்டினார். அவை ஓடிய போது அந்தப் பெண்ணை துண்டாக கிழித்து விட்டன. கைஸ் அவர்கள் இன்னும் இரண்டு நபர்களையும் கொலை செய்தார்கள். ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் தமது போர் நடவடிக்கை முடிந்து திரும்பி வந்தபோது பெருமானார் (ஸல்) அவர்களின் வீட்டுக் கதவை தட்டினார்கள். அன்னார் தமது உடையை இழுத்தவாறு ஸைதின் பக்கம் வந்தார்கள்; அவர்களை முத்தமிட்டார்கள்; நலம் விசாரித்தார்கள். அல்லாஹ் தமக்கு வழங்கிய வெற்றியைக் குறித்து ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தகவல் கூறினார்கள்.

இந்த சம்பவத்தில் அந்தப் பெண் கிழிக்கப்பட்டு இரண்டு துண்டுகளாக ஆக்கப்பட்டாள் என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால், ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை மிகவும் ஆதாரத்துடன் அழகிய முறையில் எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் (ரலி) இவ்வாறு எழுதுகிறார்கள்:

தற்போது நாம் கூறியது போன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் படையெடுப்புக்கு பதிலாக இப்னு ஸஅது (ரலி) அவர்கள் எப்படிப்பட்ட ஒரு படையெடுப்பை குறித்து எடுத்துரைத்துள்ளார்கள் என்றால் அதில் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் அமீராக இருந்தார்கள். அதாவது இப்னு ஸஅது (ரலி) அவர்கள் இந்த படையெடுப்பில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பதிலாக ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை அமீராக எடுத்துரைக்கின்றார்கள். அது பற்றிய விபரத்திலும் ஓரளவுக்கு கருத்து வேறுபாடு கொண்டவாறு பின்வருமாறு எழுதுகிறார்கள்: இந்தப் போர் நடவடிக்கை வடபகுதியில் வாதியல் குராவுக்கு அருகில் குடியிருந்த பனூ ஃபஸாராவுக்கு எதிராக இருந்தது. அவர்கள் முஸ்லிம்களுடைய ஒரு வியாபாரக் குழுவின் மீது தாக்குதல் நடத்தி அதன் அனைத்து செல்வங்களையும் பொருட்களையும் பறித்துக் கொண்டனர். குழப்பம் விளைவிக்கும் இக்கூட்டத்தின் உயிர்நாடியாக ஒரு கிழவி இருந்தாள். அவளுடைய பெயர் உம்மு கிர்ஃபா என்பதாகும். அவள் இஸ்லாத்தின்

கடும் எதிரியாக இருந்தாள். அந்த பெண் போரில் பிடிக்கப்பட்டபோது, ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் குழுவில் இருந்த கைஸ் எனும் பெயருடைய ஒருவர் அந்தப் பெண்ணை கொன்று விட்டார். இப்னு ஸஅது அவர்கள் இந்த கொலை கதையை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்:

அதாவது, இந்த வரலாற்றை எழுதக் கூடியவர் கூறுகிறார்: அந்த பெண்மணியுடைய இரு கால்களையும் இரு வேறு ஒட்டகங்களில் கட்டினார்கள். பிறகு அந்த ஒட்டகங்களை வெவ்வேறு திசைகளில் விரட்டினார்கள். அதன் விளைவாக அந்த பெண்மணி நடுப்பக்கமாக இரண்டாகக் கிழிந்து இரண்டு துண்டுகளாக ஆகிவிட்டாள். அதற்குப் பிறகு அந்த பெண்ணினுடைய மகள் ஸல்மா பின் அக்வஃ அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டன. இதே கதையை ஓரளவுக்கு சுருக்கமாகவும் வேறுபாட்டுடனும் இப்னு இஸ்ஹாக் அவர்களும் எடுத்துரைத்துள்ளார்கள்.

இந்த அறிவிப்பின் அடிப்படையில் கிழக்கத்திய வரலாற்றாசிரியரான சர் வில்லியம் முயர் என்பவர் - இவர் மற்ற ஐரோப்பிய வரலாற்றாசிரியர்களை காட்டிலும் அதிகமாக விளக்கம் எழுதும் பழக்கம் உடையவராக இருக்கிறார். அவர் இந்த சம்பவத்தை முஸ்லிம்களின் கொடூரமான ஆன்மாவுக்கு உதாரணமாக மிக ஆர்வத்தோடு தம் நூலுக்கு அழகூட்டி எழுதியிருக்கிறார். இன்னும் கூறுவதென்றால் சர் வில்லியம் முயர் இதை தனது நூலில் எழுதியிருப்பதற்கு காரணம் இந்த போர் திட்டத்தில் முஸ்லிம்கள் ஓர் அநீதியான செயலுக்கு உள்ளானார்கள் என்று எழுதி இருக்கிறார். முயர் எழுதுகிறார்:

அவ்வருடம் முஸ்லிம்கள் பல படையெடுப்புகளுக்காக மதீனாவில் இருந்து புறப்பட நேர்ந்தது. ஆனால், அவை அனைத்தும் குறிப்பிடத் தகுந்தது கிடையாது. ஆயினும் அவற்றில் ஒரு படையெடுப்பை எடுத்துரைப்பதிலிருந்து என்னை நான் தடுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில், அதனுடைய முடிவில் முஸ்லிம்கள் சார்பாக மிகவும் அநீதியான ஒரு செயல் நிகழ்ந்தது.

இது முயர் ஸாஹிப் -ன் கூற்று ஆகும். இதன் உண்மை நிலை பற்றி எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

ஒரு சமுதாயத்தின் அநீதி, அக்கிரமத்துக்கான சான்று கிடைக்கிறது என்று ஒரு வரலாற்றாசிரியர் ஒரு சம்பவத்தை விட இன்னொரு சம்பவத்திற்கு முன்னுரிமை அளித்து அதை தம் நூலுக்கு அழகூட்டுவதாக ஆக்குகிறார் என்றால் உண்மையில் அந்த வரலாற்றாசிரியர் நடுநிலையான ஆராய்ச்சியாளர் என்று கருதப்படுவதற்கு உரிமையற்றவராக இருக்கின்றார். மற்ற சம்பவங்களை நான் விட்டு விடுகின்றேன். இதை மட்டும் எடுத்துக் கொள்கிறேன் என்று இதை அவரே எழுதி இருக்கின்றார். இதற்கான பொருள் என்னவென்றால், அவர் நடுநிலையற்றவர் என்பதும், நடுநிலையாக ஆய்வு செய்யக் கூடியவர் கிடையாது என்பதும் ஆகும். ஏனெனில், எவர் நடுநிலையற்ற முறையில் நடந்து கொள்வாரோ அவர் அந்த அநீதியின் சம்பவத்தில் ஏதாவது உண்மை இருக்கிறதா? இல்லையா? என்பதை பற்றி ஆய்வு மேற்கொள்வார் என்று அவரைப் பற்றி நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், அவ்வாறு செய்தால் அவருடைய கையில் இருந்து ஒரு சான்று சென்று விடுகிறது. எவ்வாறிருப்பினும், முயர் ஸாஹிப் அவர்கள் இந்த சம்பவத்தை குறிப்பான ஆர்வத்துடன் நூலில் எடுத்துரைத்துள்ளார். ஆனால், அந்த சம்பவம் முற்றிலும் தவறானது என்றும், அடிப்படையற்றது என்றும் ஆதாரப்பூர்வமாகவும், அறிவுப்பூர்வமாகவும் இரு வகையிலும் போலியானது என்பதையும் தற்போது நான் நிரூபிப்பேன். அதன் மூலமாக இவ்விஷயங்கள் வெளிப்பட்டு விடும்.

அறிவுப்பூர்வமாக புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், ஒரு பெண் மீது கொலை குற்றம் எதுவும் கிடையாது. அவள் கைது செய்யப்படுகிறாள். பொறுமையாக அவள் கொல்லப்படுகிறாள். அதுவும் எந்த வழிமுறையில் அவர் கொல்லப்படுகிறாள் என்றால் அது பற்றி அறிவிப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இது இஸ்லாமிய போதனையை விட்டு விலகிய ஒரு விஷயமாகும். இஸ்லாமோ போர்க் களத்திலும் கூட பெண்ணை கொலை செய்வதை விட்டு கடுமையாக தடுக்கின்றது. இதைக் குறித்து பெருமானார் (ஸல்) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். பெண்களை கொலை செய்யக் கூடாது என்று கூறியிருக்கின்றார்கள். ஹதீஸில் வருகின்றது: ஒரு சந்தர்ப்பத்தில் போர்க் களத்தில் ஓர் எதிரி சமுதாயத்தின் பெண் கொலை செய்யப்பட்டு கிடந்தாள். அந்த பெண் எந்த சூழ்நிலையில் யாரால் கொலை செய்யப்பட்டாள் என்று தெரியவில்லை. அவ்வாறிருந்தும் பெருமானார் (ஸல்) அவர்கள் அதைக் கண்டு கடும் கோபமுற்றார்கள். இது போன்ற செயல் இனிமேல் நிகழக் கூடாது என்று ஸஹாபிகளிடம் வலியுறுத்திக் கூறினார்கள். எந்தவொரு பெண்ணையும் கொலை செய்யக் கூடாது என்று கூறினார்கள். அவ்வாறே, பெருமானார் (ஸல்) அவர்கள் ஏதேனும் ஒரு படைப் பிரிவை வழி அனுப்பி வைக்கும்போதெல்லாம் பொதுவாக ஸஹாபிகளுக்கு அறிவுரை கூறும்போது எந்த பெண்ணையும்,குழந்தையையும் கொலை செய்யக் கூடாது என்று அறிவுரை செய்வார்கள்.

இந்த அடிப்படையான வழிகாட்டல்கள் இருக்கும்போது, ஸஹாபிகளை குறித்து, அதுவும் ஸஹாபிகளில் பெருமானார் (ஸல்) அவர்களின் வீட்டு நபராகிய ஸைது பின் ஹாரிஸா (ரலி) என்ற ஸஹாபியை குறித்து அவர்கள் ஒரு பெண்ணை இந்த வழிமுறைப்படி கொலை செய்தார்கள் என்றோ கொலை செய்ய வைத்தார்கள் என்றோ இப்னு ஸஅது அவர்கள் எடுத்துக் கூறியிருப்பது ஒருபோதும் ஏற்க தகுந்தது கிடையாது. அறிவிப்பில் அந்த கொலைச் செயல் ஸைது அவர்களை நோக்கி சுட்டிக் காட்டப்படவில்லை. மாறாக, மற்றொரு முஸ்லிமின் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆயினும், இந்த சம்பவம் ஸைது (ரலி) அவரகள் படைத்தளபதியாக இருந்த போது, நிகழ்ந்ததாகும். ஆகவே எவ்வாறு இருப்பினும், அதன் கடைசி பொறுப்பாளியாக ஸைது (ரலி) அவர்கள்தான் கருதப்படுவார்கள். ஸைது (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் போதனையை




அறிந்தும் கூட இதுபோன்ற ஒரு விஷயத்திற்கு அவர்கள் அனுமதி கொடுத்தார்கள் என்று ஸைது (ரலி) அவர்களைக் குறித்து கருதுவது ஒருபோதும் ஏற்கத் தகுந்தது கிடையாது. ஒரு பெண் ஏதேனும் குற்றம் செய்திருந்தால் அந்தக் குற்றத்திற்கான தண்டனையை பெறுவாள். எந்த ஒரு மார்க்கச் சட்டமும், எந்தவொரு நாட்டின் சட்டமும் பெண் குற்றம் செய்திருக்கும்போது தண்டனையை விட்டு அவளை விதிவிலக்காக ஆக்கியிருக்கவில்லை. நாள்தோறும் பெண்களுக்கு வழங்கப்படும் தண்டனைக் குறித்தும், இன்னும் கூறுவதென்றால், கொலை குற்றத்திற்காக தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட சம்பவத்தைக் குறித்தும் (செய்திகள்) வெளியாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால், மார்க்கப் பகைமையின் காரணமாகவோ அல்லது போரில் கலந்து கொண்டதன் காரணமாகவோ ஒரு பெண்ணை கொலை செய்வது என்பது, அதுவும் அறிவிப்பில் எடுத்துரைக்கப்பட்டிருப்பது போன்று இந்த வழிமுறைப்படி கொலை செய்வது என்பது எப்படிப்பட்ட செயல் என்றால் பெருமானார் (ஸல்) அவர்களின் அடிப்படை வழிகாட்டல்களும், முழு இஸ்லாமிய வரலாறும் இதை தெளிவாக மறுக்கின்றது. அந்தப் பெண் குற்றவாளி என்று கூறப்படும் என்றால் அதாவது சில அறிவிப்புகளில் எடுத்துரைக்கப்பட்டிருப்பது போன்று அந்தப் பெண் பெருமானார் (ஸல்) அவர்களை கொலை செய்ய திட்டம் தீட்டினாள் என்று வருகிறது. ஆகவே அவளுக்கு எதிராக ஆகுமான வழியில் மரண தண்டனை விதித்திருக்க வேண்டும் என்று கூறப்படும் என்றால் அது சரியானது.

ஆனால், கேள்வி என்னவென்றால் உம்மு கிர்ஃபாவை காட்டிலும் கடுமையான, அதிக கொலை செய்த எதிரிகளையும், ஆண் எதிரிகளையும் கூட ஸஹாபிகள் இவ்வாறு கொலை செய்தது கிடையாது. ஸைது பின் ஹாரிஸா போன்ற நன்கு அறிந்திருந்த ஒரு ஸஹாபியின் தலைமையில் ஒரு வயோதிக பெண்ணுடன் இவ்வாறு நடந்து கொள்ளப்பட்டது என்று கருதப்படுவதை முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே அறிவுப்பூர்வமாக பார்க்கும் போது இந்தக் கதை பொய்யானது என்றும் இட்டுக்கட்டப்பட்டது என்றும் தெளிவாக தெரிகின்றது. மார்க்க துவேஷமற்ற ஒருவருக்கு இதில் எவ்வித சந்தேகமும் எஞ்சி இருக்காது.

இப்போது ஆதாரப்பூர்வமாக பார்ப்போம்! முதல் விஷயம் என்னவென்றால், இப்னு ஸஅது இப்னு இஸ்ஹாக ஆகியோர் இந்த அறிவிப்புக்கு எந்தவோர் அறிவிப்பாளர் தொடரையும் முன் வைக்கவில்லை. எந்தவொரு நம்பத் தகுந்த அறிவிப்பாளர் தொடருமின்றி பெருமானார் (ஸல்) அவர்களின் தெளிவான வழிகாட்டலுக்கும், ஸஹாபிகளின் பொதுவான, பிரபல்யமான வழிமுறைக்கும் எதிராக இதுபோன்ற அறிவிப்புகள் இருக்கும் என்றால் அவற்றை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இரண்டாவது விஷயம் என்னவென்றால், மிகவும் நம்பத் தகுந்த ஹதீஸ் நூல்களான ஸஹீஹ் முஸ்லிமிலும், சுனன் அபூதாவூதிலும் இதே சம்பவம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால், அவற்றில் உம்மு கிர்ஃபா சம்பவம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவற்றில்

உம்மு கிர்ஃபா கொலை செய்யப்பட்ட சம்பவத்தைப் பற்றிய எந்தக் குறிப்பும் கிடையாது. அத்துடன் இன்னும் சில விவரங்களிலும் எடுத்துரைக்கப்பட்ட அறிவிப்புகளில் இப்னு ஸஅது போன்றோரின் கூற்றுடன் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. ஸஹீஹான ஹதீஸ்கள் பொதுவான வரலாற்று அறிவிப்புகளை காட்டிலும் நிச்சயமானதாகவும், ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும், அதிக உறுதியானதாகவும், முன்னுரிமை பெற்றதாகவும் இருக்கின்றது. ஆகவே ஸஹீஹ் முஸ்லிம் மற்றும் சுனன் அபூதாவூதுடைய அறிவிப்புகளுக்கு முன்னால் இப்னு ஸஅது போன்றோரின் அறிவிப்புகளுக்கு எந்த முக்கியத்துவமும் கிடையாது.நாம் பின்வரும் விஷயத்தை கருத்தில் கொள்ளும்போது, இந்த வேறுபாடு மிகவும் தெளிவாக தென்படுகின்றது. அது என்னவென்றால், இப்னு ஸஅது மற்றும் இப்னு இஸ்ஹாக் ஆகியோர் தம் அறிவிப்புகளை எவ்வித அறிவிப்பாளர் தொடரும் இன்றி வெறுமனே எடுத்துரைத்திருக்கும் வேளையில் இமாம் முஸ்லிம் மற்றும் அபூதாவூத் ஆகியோர் தம் அறிவிப்புகளுக்கு முழுமையான அறிவிப்பாளர் தொடரை கொடுத்துள்ளார்கள். ஹதீஸ்களை தொகுக்கக் கூடியவர்கள் எந்த அளவு முன் எச்சரிக்கையுடன் செயல்படுகிறார்களோ அதற்கெதிரில் வரலாற்றாசிரியர்களின் பொதுவான அறிவிப்புகளுக்கு எவ்வித உண்மைத்துவமும் இருப்பதில்லை.

ஸஹீஹ் முஸ்லிம் மற்றும் சுனன் அபூதாவூதில் இந்த சம்பவம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அவற்றில் உம்மு கிர்ஃபா கொலை செய்யப்பட்ட சம்பவத்தைப் பற்றிய எவ்வித குறிப்பும் கிடையாது. கிர்ஃபாவின் பெயர் குறிப்பிடப்படவில்லைதான். அந்தப் படைக்கு தளபதியாக இருந்தவரின் பெயரும் ஸைது அவர்களுக்கு பதிலாக அபூபக்ர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதுதான். ஆகவே இதன் காரணமாக இது வேறொரு போர் என இதை சந்தேகம் கொள்ள முடியாது. ஏனெனில், மற்ற அனைத்து விவரங்களும் ஒரேபோன்றுதான் உள்ளது. உதாரணமாக, இரு அறிவிப்புகளிலும் இந்த போர் நடவடிக்கை பனூ ஃபஸாராவுக்கு எதிராக இருந்தது என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது. இரண்டாவது விஷயம், இரு அறிவிப்புகளிலும் பனூ ஃபஸாராவுடைய தலைவியாக ஒரு வயோதிகப் பெண் இருந்தாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பெண் கைது செய்யப்பட்டது பற்றிய குறிப்பு இரு அறிவிப்புகளிலும் உள்ளது.

பிறகு இரு அறிவிப்புகளிலும் அந்த பெண்ணுக்கு ஒரு மகள் இருந்தது பற்றியும், அவள் தாயுடன் கைது செய்யப்பட்டது பற்றியும் குறிப்பு உள்ளது. அந்தப் பெண் ஸல்மா பின் அக்வஃ அவர்களின் பங்கில் வந்தாள் என்ற குறிப்பும் இரு அறிவிப்புகளிலும் காணப்படுகிறது.

அதுமட்டுமின்றி இன்னும் பல விஷயங்களிலும் ஒற்றுமை காணப்படுகிறது. இப்போது சிந்தித்துப் பாருங்கள்! இந்த முக்கியமான, அடிப்படையான ஒற்றுமைகள் இருந்தபோதிலும் இது வெவ்வேறான சம்பவங்கள் என்று யாராவது சந்தேகம் கொள்ள முடியுமா என்ன? நாம் அறிவுப்பூர்வமான சான்றுகள் மட்டுமே போதுமென கருதவில்லை. மாறாக, இப்னு ஸஅது அவர்கள் வேறொரு வகையில் எடுத்துரைத்த இச்சம்பவம் ஸஹீஹ் முஸ்லிம் மற்றும் சுனன் அபூதாவூதில் கூறப்பட்டுள்ள சம்பவமே ஆகும் என்று முந்தைய வரலாற்றாசிரியர்களும் கூட தெளிவாக எழுதியிருக்கின்றார்கள். உதாரணமாக. அல்லாமா கர்கானீ இமாம் ஸாஹிலீ மற்றும் அல்லாமா ஹலபீ ஆகியோர். இப்னு ஸஅது மற்றும் இப்னு இஸ்ஹாக் உம்மு கிர்ஃபா தொடர்பாக தவறாக எழுதியுள்ள அதே சம்பவம்தான் இதுவாகும் என்று தெளிவாக எழுதியுள்ளனர். மேலும் இதை விடவும் அதிகமாக மற்றொரு சான்றும் கிடைக்கிறது. அது என்னவென்றால், தபரீ அவர்கள் இரு அறிவிப்புகளையும் அடுத்தடுத்து எடுத்து வைத்து இந்த இரு சம்பவமும் ஒரே சம்பவம்தான் ஆகும் என்று தெளிவாக எழுதி இருக்கின்றார்கள்.

சுருக்கம் என்னவென்றால், முஸ்லிம் மற்றும் அபூதாவூத் போன்ற ஹதீஸ் நூல்களில் ஸலமா பின் அக்வஃவுடைய அறிவிப்பில் எடுத்துக் கூறப்பட்டுள்ள சம்பவத்தைத்தான் இப்னு ஸஅது மற்றும் இப்னு ஹிஷாம் ஆகியோர் உம்மு கிர்ஃபா போர் என்ற பெயரில் தவறாக எடுத்துரைத்துள்ளார்கள் என்பது முற்றிலும் நம்பத் தகுந்த விஷயமாக உள்ளது.ஸிஹாஹ் சித்தா உடைய அறிவிப்பில் அதாவது ஆறு நம்பத் தகுந்த ஹதீஸ் கிரந்தங்களில் கூறப்பட்டுள்ள அறிவிப்புகள், அறிவிப்பாளர்களின் தொடருடன் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அந்த அறிவிப்பில் அந்த சம்பவத்தில் ஈடுபட்ட நபருடைய அறிவிப்பும் உள்ளது. எவ்வாறியிருப்பினும், இப்னு ஸஅது மற்றும் இப்னு ஹிஷாம் ஆகியோருடைய அறிவிப்பாளர் தொடர் இல்லாத அறிவிப்புகளை காட்டிலும் இது முன்னுரிமை பெற்றதாக உள்ளது. உம்மு கிர்ஃபா என்ற பெண் கொடூரமான முறையில் கொல்லப்பட்ட சம்பவம் முற்றிலும் பொய்யனதும், அடிப்படையற்ற சம்பவமும் ஆகும் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. அது மறைவான இஸ்லாத்தின் எதிரியால் நயவஞ்சகர்களின் தயவால் சில வரலாற்று அறிவிப்புகளில் இடம் பெற்றுள்ளது. உண்மை என்னவென்றால், இந்தப் போரை குறித்து முஸ்லிம் மற்றும் அபூதாவூதில் என்ன எடுத்துரைக்கப்பட்டுள்ளதோ அதை விட அதிகமாக வேறு ஒன்றும் கிடையாது. ஒரு தவறான சம்பவம் வரலாற்றில் இடம்பெறுவது வியப்பை தரக் கூடிய விஷயம் ஒன்றும் கிடையாது. ஏனெனில், இது போன்ற உதாரணங்கள் எல்லா சமுதாயத்து வரலாற்றிலும். எல்லா நாட்டினுடைய வரலாற்றிலும் காணக் கிடைக்கின்றன. ஆனால், வியப்பை தருகின்ற விஷயம் என்னவென்றால், சர் வில்லியம் முயர் போன்ற ஒருவர் இந்த தவறான சம்பவத்தை எவ்வித ஆராய்ச்சியும் இன்றி தன் நூலில் இடம் பெறச் செய்து, அதை தன் நூலில் குறிப்பிட்டதற்கான காரணத்தை எடுத்துக் கூறும் போது, முஸ்லிம்களின் ஓர் அநீதியான செயலுக்கான உதாரணம் கிடைக்கிறது என்று பகிரங்கமாக ஒப்புக் கொள்வதே ஆகும்.

எவ்வாறிருப்பினும், இந்த சம்பவமே தவறாகும். இது இவ்வாறு நிகழவே இல்லை.

அபூ ராஃபி என்பவனை நோக்கி அனுப்பப்பட்ட அப்துல்லாஹ் பின் அதீக் என்பவரின் போர் நடவடிக்கை குறித்தும் வரலாற்றில் குறிப்பு காணப்படுகிறது. இந்த போர் நடவடிக்கை ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ரமலான் மாதம் நிகழ்ந்ததாக இப்னு ஸஅது எழுதியிருக்கிறார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் பல்வேறு வரலாற்று நூல்களை ஆய்வு செய்த பிறகு பின்வருமாறு எழுதுகிறார்கள்:

அபூ ராஃபி கொலை செய்யப்பட்ட காலகட்டத்தை குறித்து அறிவிப்புகளில் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. புஹாரீ, ஸுஹ்ரீயை பின்தொடர்ந்தவாறு குறிப்பிட்ட காலத்தை கூறாமல் கஅப் பின் அஷ்ரஃப் உடைய கொலைக்குப் பிறகு உடனே நிகழ்ந்ததாக கூறியுள்ளது. எவ்வாறு இருப்பினும் இது சரியே ஆகும். இந்த சம்பவங்களை அடுத்தடுத்து எடுத்துரைத்தற்கான காரணம்,அநேகமாக இந்த இரு சம்பவங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருக்கின்றன என்பதாலும், அவற்றின் நோக்கம் ஒன்றாக இருக்கின்றன என்பதாலும் இருக்கலாம். தபரீ அவர்கள் ஹிஜ்ரீ மூன்றாம் ஆண்டு கஅப் பின் அஷ்ரஃப் உடைய சம்பவத்திற்கு பிறகு இதை வைத்துள்ளார். வாக்தீ அவர்கள் இப்னு இஸ்ஹாக் உடைய அறிவிப்பின் அடிப்படையில் பனூ குறைழா போருக்குப் பிறகு உடனே நிகழ்ந்ததாக இதை கூறியுள்ளார். அது ஹிஜ்ரீ ஐந்தாம் ஆண்டின் இறுதியில் நிகழ்ந்தது. ஆக இது ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டின் ஆரம்பத்தில் நிகழ்ந்ததாக புரிந்து கொள்ளலாம். ஆனால், இப்னு ஸஅது அவர்களோ தெளிவாக ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு என்று கூறியுள்ளார். சாதாரண வரலாற்று ஆசியர்கள் இப்னு ஸஅது அவர்களைப் பின்பற்றி இருக்கின்றார்கள். அல்லாஹ்வே நன்கறிவான்!

இப்னு இஸ்ஹாக் அவர்கள் எடுத்துரைத்துள்ளது என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக படையை ஒன்று திரட்டியவர்களுள் அபூ ராஃபி என்று அழைக்கப்பட்ட ஸலாம் பின் அபூ ஹுகைக் என்பவனும் இருந்தான். அவ்ஸ் கோத்திரம் உஹது போருக்கு முன் கஅப் பின் அஷ்ரஃப் எனும் யூதனை கொன்றிருந்தார்கள். ஏனெனில், அவன் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த பகைமையின் காரணமாகவும் அன்னாருக்கு எதிராக (மக்களை) தூண்டி விட்டதன் காரணமாகவும் அவனை கொன்றிருந்தார்கள். ஆகவே அகழ் போர் மற்றும் பனூ குறைழாவின் விவகாரம் முடிவுக்கு வந்தபோது கஸ்ரஜ் கோத்திரம் ஸலாம் பின் அபூ ஹுகைக்கை கொலை செய்வதற்கு அன்னாரிடம் அனுமதி வேண்டினார்கள். அப்போது அவன் கைபரில் இருந்தான். அன்னார் அவர்களுக்கு அனுமதி வழங்கினார்கள். அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் ஆகிய இந்த இரு கோத்திரங்களும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இரு ஆண் ஒட்டகங்களைப் போன்று (தமக்குள்) போட்டி போட்டுக் கொண்டிருந்தனர். அவ்ஸ் கோத்திரம் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக ஏதேனும் பணியை செய்து முடித்தால், அந்த வேலையின் காரணமாக அவர்கள் அன்னாரின் நெருக்கத்தையும், இஸ்லாத்தில் தம்மை விட சிறப்பினையும் பெற்றுவிடுவார்கள் என்று கஸ்ரஜ் கோத்திரத்தினர் கூறுவார்கள். ஆகவே

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

அவர்களும் அதே போன்று ஏதாவது பணியை செய்து முடிக்காத வரை அவர்கள் ஓய மாட்டார்கள். அவ்வாறே, கஸ்ரஜ் கோத்திரத்தினர் ஏதாவது வேலையை செய்து முடிக்கும் போது அவ்ஸ் கோத்திரத்தினரும். அதற்கு நிகரானதை செய்வார்கள். கஅப் பின் அஷ்ரஃப் என்பவன் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது பகைமை கொண்டதன் காரணமாக அவ்ஸ் கோத்திரத்தினர் அவனைக் கொன்ற போது கஸ்ரஜ் கோத்திரத்தினர் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவ்ஸ் கோத்திரம் ஒருபோதும் நம்மை விட சிறப்பினை பெற முடியாது.

அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் நெருக்கத்தை பெறக் கூடிய பணிகளில் அவர்கள் போட்டி போட்டுக் கொண்டிருந்தனர். பெருமானார் (ஸல்) அவர்கள் மீதான பகைமையில் கஅப் பின் அஷ்ரஃப்-க்கு நிகராக யார் இருக்கிறார்கள்? என்று அவர்கள் சிந்திக்க ஆரம்பித்தனர். அப்போது இப்னு அபூ ஹுகைக் நினைவுக்கு வந்தான். அவன் கைபர் அல்லது ஹிஜாஸ் பகுதியில் இருந்தான்.

இப்னு ஸஅது கூறுகிறார்கள்: அபூ ராஃபி பின் அபீ ஹுகைக், ஃகத்ஃபான் கோத்திரம் மற்றும் சுற்று வட்டாரத்தில் உள்ள இணைவைப்பாளர்களை ஒன்று சேர்த்துள்ளான் என்றும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக போரிடுவதற்காக அம்மக்களுக்கு பெரும் தொகையை நிர்ணயித்துள்ளான் என்றும் கஸ்ரஜ் கோத்திரத்தினர் கூறினார்கள். ஆகவே கஸ்ரஜ் கோத்திரத்தினர் அவனை கொலை செய்வதற்காக அன்னாரிடம் அனுமதி வேண்டினார்கள். அன்னாரும் அவர்களுக்கு அனுமதி வழங்கினார்கள். இவ்வாறு கஸ்ரஜ் கோத்திரத்தில் இருந்து பனூ ஸல்மாவை சார்ந்த ஐந்து நபர்கள் புறப்பட்டார்கள். அவர்களின் பெயர்கள்: அப்துல்லாஹ் பின் அத்தீக். மஸ்வூது பின் ஸினான், அப்துல்லாஹ் பின் உனைஸ் ஜுஹ்னீ - இவர் அன்ஸார் உடைய நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். அபூ கதாதா ஹர்ஸ் பின் ரிப்யீ, கஸாயீ பின் அஸ்வத் ஆகியோர். முஹம்மத் பின் உமர் மற்றும் இப்னு ஸஅது ஆகியோரை பொறுத்தவரை அந்த நபர் அஸ்வத் பின் குஸாயீ ஆவார். அன்ஸாருடைய நட்புக் கோத்திரமான அஸ்லம் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார் பராஃ பின் ஆஸிப் அவர்கள். அப்துல்லாஹ் பின் உத்பா உடைய பெயரையும் சேர்த்துள்ளார்கள். ஸஹீஹ் புஹாரியிலும் அவ்வாறே உள்ளது. இவ்வாறு புறப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆறு நபர்களாக ஆகிவிடுகிறது. உக்பா மற்றும் ஸஹாலீ ஆகியோர் அஸத் பின் ஹராமையும் இணைத்துள்ளார்கள். இவ்வாறு ஏழு பேராக ஆகிறார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களுக்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அத்தீக் (ரலி) அவர்களை அமீராக நியமித்தார்கள். குழந்தைகளையும், பெண்களையும் கொலை செய்வதிலிருந்து அவர்களை தடை செய்தார்கள்.

பாருங்கள்! பெண்களை கொலை செய்யக் கூடாது என்று அன்னார் இங்கும் மிகத் தெளிவாக கூறியிருக்கின்றார்கள். ஸஹீஹ் புகாரியில் அபூ ராஃபி கொல்லப்பட்ட சம்பவம் விவரமாக இவ்வாறு வருகிறது:

ஹஸ்ரத் பராஃ பின் ஆஸிப் அறிவிக்கின்றார்கள்: அபூ ராஃபி என்பவன் இறைத் தூதர் (ஸல்) அவர்களைப் மிகவும் புண்படுத்தி வந்ததுடன் அன்னாருக்கெதிராகப் பகைவர்களுக்கு உதவியும் செய்து வந்தான். அவன் ஹிஜாஸ் பிரதேசத்திலிருந்த தன்னுடைய கோட்டையில் இருந்தான். எனவே அன்ஸாரிகள் அந்தக் கோட்டையை நெருங்கினார்கள். அப்போது சூரியன் மறைந்து விட்டிருந்தது. மக்கள் தங்கள் கால்நடை மந்தைகளுடன் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது அப்துல்லாஹ் பின் அத்தீக் தம் சகாக்களிடம், நீங்கள் இங்கேயே அமர்ந்திருங்கள்; நான் காவலனிடம் சென்று ஏதாவது தந்திரம் செய்து (கோட்டைக்கு) உள்ளே நுழைய முடியுமா? என்று பார்த்து வருகின்றேன் என்று கூறினார். அவர் சென்று கோட்டை வாசலை நெருங்கினார். பிறகு, தம் ஆடையினால் தம்மை மூடிக் கொண்டு இயற்கைக் கடனை நிறைவேற்றுவது போல் (கோட்டைக்கு வெளியே ஓரிடத்தில்) அமர்ந்தார். (கோட்டை வாசிகளான) மக்கள் (அனைவரும்) உள்ளே நுழைந்து விட்டனர்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. அப்துல்லாஹ் பின் அத்தீக் அவர்கள் கூறுகின்றார்கள்: கோட்டைக்குள் நுழைவதற்கு ஏதேனும் சாக்கு போக்கு தேட வேண்டும் என நான் தந்திரம் செய்ய ஆரம்பித்தேன். அப்போது கோட்டைவாசிகளுடைய கழுதை ஒன்று காணாமல் போயிருந்தது. விளக்கை எடுத்துக் கொண்டு அதை தேடிப்பிடிக்கலாம் என்று அவர்கள் பேசினார்கள். அவர்கள் என்னை அடையாளம் கண்டு கொள்ளக் கூடாதே! என்று நான் அஞ்சினேன். ஆகவே நான் இயற்கைக் கடனை நிறைவேற்றுவது போல் என் தலையை மறைத்துக் கொண்டேன். அந்த ஸஹாபி தம் தலையை மறைத்துக் கொண்டார்.

புஹாரியின் அறிவிப்பில் வருகிறது: அப்போது அல்லாஹ்வின் அடியானே! (கோட்டைக்கு) உள்ளே நுழைய விரும்பினால் நுழைந்து கொள்;நான் வாசலை மூடப் போகிறேன் என்று காவலன் கூறினான். உடனே நான் உள்ளே நுழைந்து (ஓரிடத்தில்) பதுங்கிக் கொண்டேன். மக்கள் (அனைவரும்) நுழைந்ததும் அவன் வாசலை மூடிவிட்டான். பிறகு சாவிகளை ஒரு கொக்கியில் தொங்கவிட்டான். நான் சாவிகளை நோக்கிச் சென்று, அவற்றை எடுத்துக் கொண்டேன். பிறகு வாசலைத் திறந்தேன்.

ஓர் அறிவிப்பில் வருகிறது:

நானும் உள்ளே சென்று விட்டேன். கோட்டைக்குள் கதவுக்கருகில் இருந்த கழுதைத் தொழுவம் ஒன்றில் பதுங்கிக் கொண்டேன். மக்கள் உள்ளே வந்துவிட்டபோது அவன் கதவை மூடிவிட்டான். சாவிகளை ஓர் ஆணியில் தொங்க விட்டான். நான் அந்த சாவிகளை நோக்கி சென்று அவற்றை எடுத்துக் கொண்டேன். கதவையும் திறந்து வைத்தேன்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: ஆரவாரங்கள் ஓய்ந்தபோது, எவ்வித அசைவையும் நான் காணாதபோது நான் வெளியே வந்தேன். காவலன் ஒரு மாடத்திற்குள் கோட்டையின் சாவிகளை வைப்பதை நான் பார்த்தருந்தேன்.

இதுவும் புஹாரியுடைய அறிவிப்பாகும்.

அபூ ராஃபியிடம் மக்கள் இரவில் பேசிக் கொண்டிருந்தார்கள். அவன் சபைகளை கூட்டி வந்தான். அப்போது அவன் தன்னுடைய மாடியறையில் இருந்தான். அவனுடன் பேசிக் கொண்டிருந்தவர்கள் அவனை விட்டு சென்ற பிறகு, ஓர் அறிவிப்பில் வருகிறது. மக்கள் அபூ ராஃபியிடம் இரவு உணவை உண்டனர். பிறகு இரவின் ஒரு பகுதி முடியும் வரை பேசிக் கொண்டிருந்தனர். பிறகு மக்கள் தத்தம் வீடுகளுக்கு திரும்பினர்.

இதுவும் புகாரியுடைய அறிவிப்பாகும்.

அப்போது நான் அவனை நோக்கி (ஏணியில்) ஏறினேன். ஒவ்வொரு வாசலையும் திறக்கும் போதும் உள் பக்கமாக நான் தாழிட்டுக் கொண்டே சென்றேன்.மக்கள் என்னை இனம் கண்டு கொண்டாலும் அபூ ராஃபியை நான் கொன்று விடும் வரையில் அவர்கள் என்னை வந்தடைய போவதில்லை என்று நான் என் மனதிற்குள் கூறிக் கொண்டேன். பிறகு அவனிடம் போய்ச் சேர்ந்தேன்.

இன்னோர் அறிவிப்பில் வருகிறது. பிறகு நான் அம்மக்களுடைய வீட்டுக் கதவுகளை நோக்கிச் சென்றேன். அவற்றை வெளிப்பக்கமாக பூட்டினேன். அதற்குப் பிறகு அபூ ராஃபி தங்கியிருந்த மாடியறையை நோக்கி ஏணி வழியாக ஏறி அவனுக்கருகில் சென்றேன்.

இதுவும் புகாரியுடைய அறிவிப்பாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: அவன் இருட்டான ஓர் அறையில் தன் குடும்பத்தாருக்கிடையே படுத்திருந்தான். அந்த அறையில் அவன் எங்கே இருக்கிறான்? என்று எனக்குத் தெரியவில்லை. அப்போது, அபூ ராஃபி! என்று நான் அழைத்தேன். யார் அது? என்று அவன் கேட்டான். குரல் வந்த திசையை நோக்கிக் அனுமானமாக குறிவைத்து வாளால் ஒரு வெட்டு வெட்டினேன். நான் பதற்றமடைந்திருந்தேன்; அந்த வெட்டு எந்த வேலைக்கும் ஆகவில்லை. அப்போது அவன் கூச்சலிட்டான். அவன் மீது சரியாக வெட்டு விழுந்திருக்கவில்லை. உடனே நான் அந்த அறையிலிருந்து வெளியேறி விட்டேன். சிறிது நேரம் தாமதித்து மீண்டும் அவனிடம் வந்து, அபூ ராஃபி! இது என்ன சத்தம்? என்று அவனுக்கு உதவ வந்தவன் போல் என் குரலை மாற்றி கேட்டேன். அதற்கு, உன்னுடைய தாய்க்குத் கேடு நேரட்டும்! எவனோ ஒருவன் வீட்டில் (நுழைந்து) சற்றுமுன் என்னை வாளால் வெட்டினான் என்று அவன் கூறினான்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அத்தீக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

உடனே நான் அவன் மீது இன்னொரு வெட்டு வெட்டினேன். அது அவனை இரத்தத்தால் நனைத்தது. அப்போதும் அவனை என்னால் கொல்ல முடியவில்லை. பிறகு வாள் முனையை அவன் வயிற்றில் வைத்து அழுத்தினேன். அது முதுகு வழியே வெளியேறியது.

மீண்டும் தாக்குதல் நடத்திய குறிப்பு இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: பிறகு நான் மீண்டும் அவனை நோக்கி பாய்ந்தேன். அவனை மீண்டும்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

தொலைபேசி எண் : 1800 103 2131

இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

வெட்டினேன். ஆனால், அதில் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. அவன் அலறினான். அவனுடைய வீட்டார்கள் எழுந்து விட்டனர். பிறகு நான் மீண்டும் வந்து உதவுபவனைப் போன்று என்னுடைய குரலை மாற்றினேன். அதாவது, இரண்டாவது முறை குரலை மாற்றிக் கொண்டு வந்தார். அவன் மல்லாந்து கிடந்தான். நான் வாளை அவனது வயிற்றில் வைத்து அமுக்கினேன். அதனால் அவன் வளைந்து விட்டான். எந்த அளவுக்கு என்றால், நான் அவனுடைய எலும்பு உடையும் சத்தத்தைக் கேட்டேன்.

இதுவும் புஹாரீயுடைய அறிவிப்பாகும்.

அப்போது நான் அவனைக் கொன்று விட்டேன் என்று அறிந்து கொண்டேன். பிறகு ஒவ்வொரு கதவாக எல்லாக் கதவுகளையும் திறந்து கொண்டே சென்று ஏணியில் இறங்கலானேன். தரைக்கு வந்து விட்டேன் என்று நினைத்துக் கொண்டு என்னுடைய காலை வைத்தேன். ஆனால், நிலவு காயும் (அந்த) இரவில் நான் விழுந்து விட்டேன்.

அது கடைசிப் படியாக இருக்கவில்லை. இன்னும் இரண்டு மூன்று படிகள் இருந்தன. அவர்கள் ஏணியிலிருந்து விழுந்து விட்டார்கள்.

அப்போது, என்னுடைய கால் உடைந்து விட்டது.

இன்னோர் அறிவிப்பில், அன்னாரின் கால் இணைப்பு வெளியே வந்து விட்டது என்று வருகின்றது.

உடனே நான் தலைப்பாகைத் (துணி)யால் அதற்குக் கட்டுப் போட்டேன். பிறகு நடந்து வந்து (கோட்டை) வாசலில் அமர்ந்து கொண்டேன். நான் அவனைக் கொன்று விட்டேன் என்று (உறுதியாக) அறியும் வரையில் நான் இந்த இரவில் (இங்கிருந்து) நகர மாட்டேன் என்று (எனக்குத் நானே) சொல்லிக் கொண்டேன்.பிறகு அதிகாலையில், சேவல் கூவியபோது மரணச் செய்தி அறிவிப்பவன் கோட்டைச் சுவர் மீது நின்று, ஹிஜாஸ் வாசிகளின் (பிரபல) வியாபாரி அபூ ராஃபி இறந்து விட்டார் என்று அறிவிப்புச் செய்தான். உடனே நான் என் சகாக்களிடம் வந்து, விரைவாகச் செல்லுங்கள்; அபூ ராஃபியை அல்லாஹ் கொன்றுவிட்டான் என்று கூறினேன். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அடைந்து நடந்ததை அவர்களுக்குத் தெரிவித்தேன்.அப்போது, உன்னுடைய காலை நீட்டு! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். நான் என் காலை நீட்டினேன்; அதில் தம் கரத்தால் தடவிவிட்டார்கள். என்னுடைய கால் குணமடைந்து ஒருபோதும் நோய் காணாதது போன்று அது மாறிவிட்டது.

இன்னோர் அறிவிப்பில் வருகிறது: அப்துல்லாஹ் பின் அத்தீக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் தடுமாறியவாறு என் தோழர்களிடம் வந்து சேர்ந்தேன். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த நற்செய்தியை கூறுங்கள். ஏனெனில், மரணச் செய்தியை கூறுபவரின் குரலை கேட்காத வரை நான் இங்கிருந்து செல்ல மாட்டேன் என்று கூறினேன். காலை விடிந்த போது மரணச் செய்தியை கூறுபவன் மதில் மேல் ஏறி நின்று அபூ ராஃபி இறந்த செய்தியை அறிவித்தான். அப்போது நான் எழுந்து நடக்க ஆரம்பித்தேன். எனக்கு எவ்வித கஷ்டமும் இருக்கவில்லை. என் தோழர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை சென்றடையும் முன் நான் என் தோழர்களை சென்றடைந்து விட்டேன்.

காலில் ஏற்பட்டிருந்த சுளுக்கு முதலிலேயே அவர்களுக்கு குணமாகி விட்டதாக இந்த அறிவிப்பு உள்ளது.

இந்த சம்பவத்தை இமாம் புஹாரீ அவர்கள் ஹஸ்ரத் பராஃ பின் ஆஸிப் (ரலி) அவர்களிடம் இருந்து அறிவித்துள்ளார்கள். அப்துல்லாஹ் பின் அத்தீக் (ரலி) அவர்கள் அபூ ராஃபி-யை தனியாக கொன்றார்கள் என்று இதில் எழுதி இருக்கின்றார்கள். ஆனால், இப்னு உக்பா, இப்னு இஸ்ஹாக், முஹம்மது பின் உமர் மற்றும் இப்னு ஸஅது போன்றோர் அப்துல்லாஹ் பின் அத்தீக் ஆகியோர், அன்னாருடன் அனைத்து தோழர்களும் சேர்ந்து கொன்றார்கள் என்று எடுத்துரைத்திருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களும் இதை ஆய்வு செய்த பிறகு பின்வருமாறு எழுதுகிறார்கள்:

எந்த யூதத் தலைவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக குழப்பங்களையும், எதிர்ப்புகளையும் தூண்டிவிட்டார்களோ, அதன் காரணமாக அகழ்ப் போர் எனும் கடுமையான குழப்பம் ஏற்பட்டதோ , அவர்களில் ஹுயய் பின் அக்தப் பனூ குறைழாவுடன் தன் தீய முடிவை அடைந்து விட்டிருந்தான். ஆனால், அபூ ராஃபி என்ற பட்டப்பெயரால் அழைக்கப்பட்ட ஸலாம் பின் அபூ ஹுகைக் என்பவன் இப்பொழுது கைபர் பகுதியில் சுந்திரமாக உலாவிக் கொண்டு குழப்பத்தை தூண்டுவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். எந்த அளவுக்கு என்றால், அகழ்ப் போரின் இழிவான தோல்வியும், பனூ குறைழாவின் பயங்கரமான முடிவும் அவனுடைய பகைமையை இன்னும் அதிகமாக்கி இருந்தது. ஃகத்ஃபான் கோத்திரத்தார்களின் குடியிருப்பு கைபருக்கு அருகில் இருந்தது. இவ்வாறு கைபருடைய யூதர்களும் நஜத் கோத்திரத்தார்களும் அண்டை அயலாராக இருந்தனர். மிகப் பெரும் வியாபாரியாகவும், செல்வந்தராகவும் இருந்த அபூ ராஃபி நஜதில் இருந்த கொடிய, போரிடக் கூடிய கோத்திரங்களை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டி விடுவதை வழக்கமாக கொண்டிருந்தான். பெருமானார் (ஸல்) அவர்கள் மீதான பகைமையில் அவன் கஅப் பின் அஷ்ரஃபை முழுமையாக ஒத்திருந்தான். எந்தக் காலத்தைப் பற்றி நாம் குறிப்பிட்டு வருகிறோமோ அதில், ஃகத்ஃபான் கோத்திரங்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்துவதற்காக அவன் பெரும் செல்வங்களைக் கொண்டு உதவி செய்து கொண்டிருந்தான். அவர்களுக்கு அதிகமாக செல்வங்களை கொடுத்துக் கொண்டிருந்தான். வரலாற்றில் இருந்து நிரூபணமாவது என்னவென்றால், ஷஅபான் மாதத்தில் பனூ ஸஅது சார்பாக முஸ்லிம்களுக்கு ஆபத்து உருவானபோது அதை தடுத்து நிறுத்துவதற்காக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் தலைமையில் ஒரு படைப் பிரிவு மதீனாவில் இருந்து அனுப்பப்பட்டிருந்தது. அதற்குப் பின்னாலும் கைபருடைய இந்த அனைத்து விஷமத்தனங்களையும் யூதர்கள் செய்து கொண்டிருந்தனர்.

ஆனால், அபூ ராஃபி இத்தோடு நின்று விடவில்லை.அவனுடைய பகைமையின் நெருப்பு முஸ்லிம்களின் இரத்தத்தின் மீது தாகம் கொண்டதாக இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களின் இருப்பு அவனுடைய கண்களில் முள்ளாக குத்திக் கொண்டிருந்தது. ஆகவே இறுதியில் அவன் ஒரு சதித் திட்டம் தீட்டினான். அகழ்ப் போருக்காக செய்தது போன்று நஜதுடைய ஃகத்ஃபான் கோத்திரங்களிலும் மற்ற கோத்திரங்களிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு முஸ்லிம்களை அழிப்பதற்காக ஒரு மாபெரும் படையை ஒன்று திரட்ட ஆரம்பித்திருந்தான். அகழ்ப் போருக்கு பிறகு மீண்டும் தாக்குதல் நடத்த அவன் ஒரு படையை ஒன்று திரட்ட ஆரம்பித்திருந்தான். நிலைமை இந்த அளவு வந்த பிறகு முஸ்லிம்களுடைய கண்களுக்கு முன்னாலும் அகழ் போருடைய அதே காட்சிகள் சுழல ஆரம்பித்தபோது, கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்த சில அன்ஸாரிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, இந்த குழப்பத்தை தீர்ப்பதற்கு ஒரே வழிதான் உள்ளது; அது, இந்த குழப்பத்தின் சூத்திரதாரியான அபூ ராஃபியை கொன்றுவிடுவதுதான். இதுவே தீர்வாகும் என்று வேண்டுகோள் வைத்தார்கள்.

நாட்டில் பரந்த அளவில் ரத்த ஆறு ஓடுவதற்கு பதிலாக ஒரு குழப்பவாதி கொல்லப்படுவது எவ்வளவோ சிறந்தது என்று சிந்தித்த பிறகு அந்த ஸஹாபிகளுக்கு அன்னார் (ஸல்) அனுமதி நல்கினார்கள். அப்துல்லாஹ் பின் அத்தீக் அன்ஸாரி (ரலி) அவர்களின் தலைமையில் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த நான்கு ஸஹாபிகளை அபூ ராஃபியை நோக்கி அனுப்பி வைத்தார்கள். வழியனுப்பும்போது அவர்களிடம், எந்த ஒரு பெண்ணையோ, குழந்தையையோ ஒருபோதும் கொலை செய்யக் கூடாது என்று வலியுறுத்தி கூறினார்கள். (இங்கு) மறுபடியும் வலியுறுத்தி கூறினார்கள். இவ்வாறு இருக்கும் போது அங்கு ஒரு பெண்ணை அவர்கள் எவ்வாறு கொன்றிருக்க முடியும்? ஆகவே, ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டில் ரமலான் மாதத்தில் இந்தக் குழு புறப்பட்டது. மிக சாத்தியமாக தன் வேலையை முடித்துக் கொண்டு திரும்பி வந்தது. இவ்வாறு இந்த துன்பத்தின் மேகம் மதீனாவை விட்டு விலகியது. இச்சம்பவத்தின் விபரம் சம்பந்தமான அறிவிப்புகளில் புஹாரீயில் கூறப்பட்டுள்ள அறிவிப்பு மிகவும் சரியானதாகும். அந்த அறிவிப்பை நான் ஏற்கனவே எடுத்துரைத்துள்ளேன். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி)) அவர்கள் தம் தொனியில் அதை எடுத்துரைத்திருந்தார்கள். அந்த ஹதீஸை நான் இங்கு எடுத்து வைக்கிறேன்.

பராஃ பின் ஆஸிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தம் ஸஹாபிகளுள் சிலரை அபூ ராஃபியிடம் அனுப்பினார்கள். அவர்களுக்கு அப்துல்லாஹ் பின் அத்தீக் அன்ஸாரி (ரலி) அவர்களை அமீராக நியமித்தார்கள். அபூ ராஃபியின் கதை இவ்வாறாக இருந்தது. அதாவது அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கடுமையான துன்பத்தை கொடுத்து வந்ததுடன், அவர்களுக்கெதிராக (மக்களை) தூண்டிவிட்டுக் கொண்டிருந்தான். (அம்மக்களுக்கு) உதவி செய்து கொண்டிருந்தான். அப்துல்லாஹ் பின் அத்தீக் மற்றும் அன்னாரின் தோழர்கள் அபூ ராஃபியின் கோட்டையை சென்றடைந்த

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

போதும், சூரியன் மறைந்து விட்டபோதும் அப்துல்லாஹ் பின் அத்தீக் தம் தோழர்களை அங்கேய விட்டு விட்டு அன்னார் கோட்டையின் கதவுக்கு அருகில் சென்றார்கள். அதற்கு அருகில் தம் ஆடையினால் தம்மை மூடிக் கொண்டு இயற்கைக் கடனை நிறைவேற்றுவது போன்று அமர்ந்தார்கள். கோட்டையின் கதவை மூடக் கூடியவன் கதவுக்கு அருகில் வந்தபோது, அப்துல்லாஹ் பின் அத்தீக் (ரலி) அவர்களைக் கண்டு, அடியானே! நான் வாசலை மூடப் போகிறேன்; நீர் உள்ளே வர விரும்புகிறீர் என்றால் விரைவாக வாரும்! என்று கூறினான். அப்துல்லாஹ் பின் அத்தீக் அவர்கள் போர்வையை மூடியவாறு விரைவாக உள்ளே சென்று ஓரிடத்தில் ஒளிந்து கொண்டார்கள். வாசலை மூடக் கூடியவன் வாசலை மூடிவிட்டு அதன் சாவியை அருகில இருந்த கொக்கியில் தொங்கவிட்டான்.

அதற்குப் பிறகு அப்துல்லாஹ் பின் அப்துல்லாஹ் பின் அத்தீக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் என் இடத்தை விட்டு வெளியேறி தேவையின்போது எளிதாகவும், விரைவாகவும் வெளியே செல்வதற்காக முதலில் அந்தக் கோட்டையின் பூட்டை திறந்தேன். அப்போது அபூ ராஃபி தன்னுடைய மாடியறையில் இருந்தான். அவனுக்கருகில் பலர் சபையைக் கூட்டி அமர்ந்திருந்தனர். அவர்கள் தமக்குள் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் எழுந்து சென்ற பிறகு அமைதியான பிறகு நான் அபூ ராஃபியின் வீட்டு ஏணியில் ஏறி மேலே சென்றேன். நான் முன்னெச்சரிக்கையாக ஒரு விஷயத்தை செய்தேன். அது என்னவென்றால், என் வழியில் வரக் கூடிய ஒவ்வொரு வாசலையும் கடந்து சென்ற பிறகு உள்பக்கமாக அதை தாழிட்டுக் கொண்டே சென்றேன். நான் அபூ ராஃபியின் அறையை அடைந்தபோது, அவன் விளக்கை அணைத்து விட்டு, உறங்குவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். அந்த அறை முற்றிலும் இருட்டாக இருந்தது.

அப்போது நான், குரல் கொடுத்து அபூ ராஃபியை அழைத்தபோது, யார் அது? என்று அவன் பதில் அளித்தான். ஆகவே குரல் வந்த திசையை நோக்கி பாய்ந்து அனுமானமாக வாளை வேகமாக வீசினேன்.ஆனால், அதிக இருட்டாக இருந்தது. அப்போது நான் பதற்றமடைந்திருந்தேன். ஆகவே வாள் வீச்சு தவறி விட்டது. அப்போது அபூ ராஃபி கூக்குரலிட்டு அலறினான். உடனே நான் அந்த அறையிலிருந்து வெளியே வந்து விட்டேன். சிறிது நேரம் தாமதித்து மீண்டும் நான் அறைக்குள் சென்று குரலை மாற்றி அவனிடம், அபூ ராஃபி! இது என்ன சத்தம்? என்று கேட்டேன். நான் குரல் மாற்றியதை அவனால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. உன்னுடைய தாய் உன்னை இழக்கட்டும்! இப்போது யாரோ என்னை வாளால் தாக்கினார்கள் என்று கூறினான். உடனே நான் குரல் வந்த திசையில் பாய்ந்து வாளால் தாக்கினேன். இம்முறை வாள் (அவனை) தாக்கியது. (எனினும்) அவன் சாகவில்லை. ஆகவே நான் மூன்றாம் முறையாக அவனை தாக்கி அவனைக் கொன்றேன்.

அதற்குப் பிறகு நான் விரைவாக ஒவ்வொரு கதவாக திறந்து வீட்டை விட்டு வெளியே வந்தேன். நான் ஏணிப்படியை விட்டு இறங்கும்போது சில படிகள் மீதம் இருக்கும்போதே எல்லாப் படிகளையும் கடந்து விட்டேன் என்று கருதி என்னுடைய காலை வைத்தபோது, இருட்டில் விழுந்து விட்டேன். தவறாக காலெடுத்து வைத்ததால் என்னுடைய கால் உடைந்து விட்டது.

இன்னோர் அறிவிப்பில் கால் இணைப்பு விலகி விட்டதாக வருகிறது.

உடனே நான் தலைப்பாகை(த் துணி)யால் அதற்குக் கட்டுப்போட்டு விட்டு இழுத்தவாறே வெளியே வந்து விட்டேன். நான் அவனைக் கொன்று விட்டேன் என்று நிம்மதி பெறாத வரை நான் இங்கிருந்து செல்ல மாட்டேன் என்று என் மனதில் கூறிக்கொண்டேன். ஆகவே கோட்டைக்கருகில் ஓரிடத்தில் ஒளிந்து கொண்டேன். காலை விடிந்த போது ஹிஜாஸ் வியாபாரி அபூ ராஃபி இறந்துவிட்டார் என்று யாரோ கூறும் ஓசை என் காதில் கேட்டது.

அதற்குப் பிறகு நான் எழுந்து மெதுவாக என் சகாக்களிடம் வந்து சேர்ந்தேன். பிறகு நாங்கள் மதீனாவுக்கு வந்து பெருமானார் (ஸல்) அவர்களிடம் அபூ ராஃபி கொல்லப்பட்ட செய்தியைக் கூறினோம். அன்னார் அனைத்து விபரங்களையும் கேட்டறிந்த பிறகு என்னிடம், உன்னுடைய காலை நீட்டு என்று கூறினார்கள். நான் என் காலை நீட்டினேன். அப்போது அன்னார் (ஸல்) துஆ செய்தவாறு அதில் தம் அருளுக்குரிய கரத்தால் தடவி விட்டார்கள். என்னுடைய கால் குணமடைந்து ஒருபோதும் நோய் காணாதது போன்று அது மாறிவிட்டது.

இன்னோர் அறிவிப்பில் வருகிறது.அப்துல்லாஹ் பின் அத்தீக் (ரலி) அவர்கள் அபூ ராஃபி மீது தாக்குதல் நடத்திய போது அவனுடைய மனைவி மிக உரத்தக் குரலில் அலற ஆரம்பித்தாள். இந்த அலறல் சத்தம் கேட்டு மற்ற மக்கள் சுதாரித்து விடக் கூடாதே! என்று அச்சம் எனக்கு ஏற்பட்டது.ஆகவே, அவனுடைய மனைவியை தாக்குவதற்காக நான் வாளை உயர்த்தியபோது, பெண்களை கொலை செய்வதில் இருந்து பெருமானார் (ஸல்) அவர்கள் தடை செய்தது எனக்கு ஞாபகம் வந்தது. ஆகவே அந்த எண்ணத்தை நான் கைவிட்டு விட்டேன் என்று அவர்கள் கூறினார்கள்.

பெண்களை கொலை செய்ய தடை செய்த அதே விஷயம்தான் இங்கும் வந்துள்ளது. ஆகவே நான் வாளைக் கொண்டு அவளை தாக்கவில்லை என்று கூறினார்கள். அவர்கள் மிகவும் அபாயகரமான நிலையில் இருந்த போதிலும் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை.

அபூ ராஃபி கொல்லப்பட்டது ஆகுமானது என்பதைக் குறித்து நாம் இங்கு எவ்வித விவாதத்தையும் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. அபூ ராஃபி கொல்லப்பட்ட சம்பவம் வரலாற்றில் ஒரு திறந்த புத்தகமாக உள்ளது. அடிப்படையில் சில விஷயங்களை மட்டும் நினைவில் கொள்ள வேண்டும். அவை என்னவென்றால்,

1) அந்நேரத்தில் முஸ்லிம்கள் மிகவும் பலவீனமான நிலையில் நாலாப்புறமும் துன்பங்களில் சிக்கியிருந்தார்கள். நாலாப்புறமும் எதிர்ப்பின் நெருப்பு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. முழு நாடும் முஸ்லிம்களை அழிப்பதற்கு ஒன்று கூடி இருந்துது.

2) இவ்வாறான இக்கட்டான நேரத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக எரிந்து கொண்டிருந்த நெருப்பை அபூ ராஃபி மூட்டிவிட்டுக் கொண்டிருந்தான். தன்னுடைய தாக்கம், செல்வாக்கு மற்றும் செல்வத்தைக் கொண்டு அரேபியாவின் பல்வேறு கோத்திரங்களை இஸ்லாத்திற்கெதிராக தூண்டிக் கொண்டிருந்தான். அரேபியாவின் கொடூரமான கோத்திரங்களை மீண்டும் ஒன்று கூட்டி அகழ்ப் போரை போன்று மதீனாவின் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்று ஆயத்தம் செய்து கொண்டிருந்தான்.

3. நீதி கேட்டு செல்வதற்கு அப்போது அரேபியாவில் எவ்வித அரசாங்கமும் இருக்கவில்லை. ஒவ்வொரு கோத்திரமும் அதனைப் பொறுத்தவரை சுதந்திரமானதாகவும், அதிகாரத்தைக் கொண்டதாகவும் இருந்தது. ஆகவே தன்னுடைய பாதுகாப்பிற்காக தானே ஏதாவது திட்டம் தீட்டினாலே அன்றி வேறு எந்த வழியும் இருக்கவில்லை.

4) யூத மக்கள் ஏற்கனவே இஸ்லாத்திற்கு எதிராக மும்முரமாக இருந்தனர். யூதர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே ஒரு போர் சூழ்நிலை உருவாகியிருந்தது.

5) அப்போது எப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தது என்றால், பகிரங்கமாக யூதர்களுக்கு எதிராக படையெடுப்பு செய்யப்படும் என்றால் அதன் விளைவாக மிக அதிக உயிர் சேதமும், பொருட் சேதமும் ஏற்பட வாய்ப்பு இருந்தது. போர் நெருப்பு இன்னும் விரிவடைந்து நாடு தழுவிய அளவில் அழிவை ஏற்படுத்தக் கூடிய அபாயமும் இருந்தது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஸஹாபிகள் செய்தது முற்றிலும் சரியானதும், பொருத்தமானதும் ஆகும். போரின் போது ஒரு சமுதாயம் வாழ்வா? சாவா? என்ற நிலையை கடந்து கொண்டிருக்கும் போது இது போன்ற திட்டங்கள் முற்றிலும் ஆகுமானதாக கருதப்படுகின்றன. ஒவ்வொரு சமுதாயமும் ஒவ்வொரு கோத்திரமும் தேவைக்கேற்ப ஒவ்வொரு காலத்திலும் இது போன்ற விஷயங்களை மேற்கொள்கின்றன. ஆனால், பரிதாபம் என்னவென்றால், ஒழுக்க சீர்கேடு உள்ள இக்காலத்தில் குற்றவாளியுடன் அனுதாபத்தோடு நடந்து கொள்வது எந்த அளவு ஆகுமானதாக ஆகிவிட்டது என்றால், ஓர் அநியாயக்காரன் கூட கதாநாயகனாக ஆகிவிடுகின்றான்.

ஓர் அநீதியாளன் கதாநாயகனாக ஆகிவிடுவதை தற்காலத்தில் நாம் பார்க்கிறோம்.

தான் செய்த குற்றங்களின் காரணமாக அவனுக்கு கிடைக்கும் தண்டனைகள் பொதுமக்களுடைய அனுதாபத்தை ஈர்க்கக் கூடியதாக ஆகிவிடுகின்றன. ஓர் அநீதியாளனுக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது என்றால் தண்டனை அறிவிக்கப்படுகிறது என்றால் பொதுமக்களுடைய அனுதாபம் அவனுடன் சேர்ந்து விடுகிறது. அல்லது சுயநலவாதிகளின் அனுதாபம் அவனுடன் சேர்ந்து விடுகிறது. அவனுடைய குற்றங்களை மக்கள் மறந்து

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

விடுகிறார்கள். ஆனால், இஸ்லாத்தைப் பொறுத்த வரை ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம் என்னவென்றால், அது இந்தப் பொய்யான உணர்வுகளுக்கு மார்க்கத்தில் இடம் அளிப்பதில்லை. அது குற்றவாளியை குற்றவாளி என்றே கூறுகிறது. குற்றவாளிக்கு வழங்கப்படும் தண்டனையை நாட்டுக்கும், சமூகத்திற்கும் அருளாக கருதுகிறது. அழுகிப்போன ஓர் உறுப்பை உடலில் இருந்து வெட்டி விட வேண்டும் என்று அது போதிக்கிறது. அழுகிப்போன உறுப்பு ஆரோக்கியமான உறுப்புகளை சீர் கெடுப்பதை அது ஆதரிப்பதில்லை.

தண்டனை கொடுக்கப்பட்ட முறையைப் பற்றி நாம் பார்ப்போம் என்றால், அதை குறித்து ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. அரேபியாவின் அப்போதைய சூழ்நிலைக்கேற்ப முஸ்லிம்களுக்கும், யூதர்களுக்கும் இடையில் இருந்த போர் சூழலுக்கு ஏற்ப அந்த வழிமுறை மேற்கொள்ளப்பட்டது. பொதுமக்களின் அமைதியை கருத்தில் கொண்டு பார்க்கும் போது அதுவே சிறந்த, பொருத்தமான வழிமுறையாக தென்படுகிறது.

அப்துல்லாஹ் பின் அத்தீக் (ரலி) அவர்களின் கால் குணமானது தொடர்பாக புஹாரியின் அறிவிப்பில் வரும்போது, அது அசாதாரண முறையில் உடனடியாக குணமானதா? அல்லது படிப்படியாக தன் இயல்பு நிலையை பூர்த்தி செய்தவாறு குணமாகியதா? என்று தெளிவாக குறிப்பிடப்படவில்லை. இரண்டாவது கூறப்பட்ட நிலை என்றால், அது ஒரு சாதாரண சம்பவமாக கருதப்படும். பெருமானார் (ஸல்) அவர்களின் துஆவின் தாக்கம் எந்த அளவு இருந்ததாக கருதப்படும் என்றால், அன்னாருடைய துஆவின் அருளினால் அந்த காயம் வருங்காலத்தில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்றும், அதனால் எவ்வித தீய விளைவும் ஏற்படவில்லை என்றும், இன்னும் கூறுவதென்றால், அப்துல்லாஹ் பின் அத்தீக் (ரலி) அவர்களின் கால் தம் அசல் மற்றும் முழுமையான ஆற்றலை பெற்றுவிட்டது என்றும் காயத்தின் தாக்கம் முழுவதுமாக விலகி விட்டது என்றும் புரிந்து கொள்ளப்படும். ஆனால், அசாதாரண முறையில் உடனடியாக அது குணமானது என்றால், நிச்சயமாக இந்த சம்பவம் இறைவனுடைய சிறப்பான நிம்மதியின் மூலமாக நிகழ்ந்த அற்புதமாகவே கருதப்படும். தன் தூதருடைய துஆ மற்றும் அருளின் விளைவாக வெளிப்பட்டதாக கருதப்படும்.

ஆகவே எவ்வாறு இருப்பினும், இந்த சம்பவங்கள் இனிமேலும் தொடரும். இன்ஷா அல்லாஹ்.

தமிழாக்கம்

மவ்லவி

A.P.A தாரிக் அஹ்மது

* * * * * * * *

### முக்கிய அறிவிப்பு

**ஸதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா அஞ்சுமன் தஹ்ரீகே ஜதீத் அஞ்சுமன் வக்ஃபே ஜதீத்,கிளை அமைப்புகளின் பொருளாதார/ கேர் டேக்கர்/ காவலாளி/ சமையல்காரர்/ மஸ்ஜித் காதிம் போன்ற பணிகளில் கிரேட் நான்கு ஊழியர்களின் தேவை உள்ளது**

### நிபந்தனைகள்

(1) விண்ணப்பதாரர் 40 வயதிற்கு மேற்பட்டவராகவும்,18 வயதிற்கு குறைந்தவராகவும் இருக்கக் கூடாது.

(2) விண்ணப்பதாரருக்கு எந்தக் கல்வித் தகுதியும் கிடையாது. எனினும், படிப்பறிவு பெற்ற விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(3) இந்த அறிவிப்பிற்கு பிறகு 2 மாதத்திற்குள் கிடைக்கப் பெறுகின்ற விண்ணபங்கள் பரிசீலிக்கப்படும்.

(4) தலைமையக பணியாளர்கள் தேர்வுக் குழுவின் நேர்முகத் தேர்வில் வெற்றி பெறும் விண்ணப்பதாரர்களே தொண்டிற்காக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(5) நேர்முகத் தேர்வு நடைபெறும் சூழலில் விண்ணப்பதாரர் காதியான் நூர் மருத்துமனையின் மூலம் பரிசோதிக்கப்படுவார்.மேலும் காதியான் நூர் மருத்துவமனை போர்ட்டுக்கு ஏற்ப உடல் ஆரோக்கியமும், தகுதியும் பெற்ற விண்ணப்பதாரர் மட்டுமே தொண்டிற்கு தகுதி பெற்றவராக இருப்பார்.

(6) தேர்ந்தெடுக்கப்படும் நிலையில் விண்ணப்பதாரர் காதியானில் தமது தங்குமிடத்திற்கான ஏற்பாட்டை சுயமே செய்து கொள்ள வேண்டும்.

(7) காதியான் வந்து செல்வதற்கான செலவும், மருத்துவ பரிசோதனைக்கான செலவுகளையும் விண்ணப்பதாரரே செய்து கொள்ள வேண்டும்.

குறிப்பு:
நேர்முகத்தேர்விற்கான தேதி விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**
**நஸாரத் தீவான் ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான்**
**அஞ்சல் எண்: 143516**
**அலைபேசி எண்: 09682627592, 09888232530,**
**அலுவலகம் எண்: 01872 - 501130**

E-mail: diwan@qadian.in

* * * * * * * *

### ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரான அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனரும் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் கூறுகிறார்கள்

ஆதமின் மக்கள் அனைவருக்கும் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர இப்போது எந்தத் தூதரும் பரிந்துரையாளரும் இல்லை. எனவே ஆற்றலும், கம்பீரமுமிக்க அந்தத் தூதரிடம் உண்மையான அன்பு கொள்ள முயலுங்கள். பிறருக்கு அவரை விட எவ்வகை பெருமையையும் கொடுக்காதீர்கள். இதனால் நீங்கள் வானில் மீட்புக்குரியவராக எழுதப்படுவீர்கள். மேலும் நினைவில் கொள்ளுங்கள். மீட்பு என்பது மரணத்திற்குப் பின்னர் நிகழ்வதன்று. மாறாக, உண்மையான மீட்பு இவ்வுலகிலேயே தன் ஒளியைக் காட்டுகிறது.

மீட்புக் கிடைக்கப் பெற்றவர் யார்? இறைவன் இருக்கின்றான் என்பது உண்மை என்பதும், அவனுக்கும், படைப்பினங்களுக்கும் இடையே பரிந்துரை செய்பவர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஒருவரே என்றும் வானத்தின் கீழ் அம்மாநபியை விட மேலான தகுதியைப் பெற்றவர் வேறு இல்லை என்றும் திருக்குர்ஆனை விட உயர்ந்த ஒரு மறைநூல் இல்லை என்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர என்றென்றும் கொள்கையாலும், கோட்பாட்டாலும் வேறெவரும் உயிர் வாழ்வதை இறைவன் விரும்பவில்லை என்றும் உறுதியாக நம்புபவரே மீட்பு பெற்றவர் ஆவார்.

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயீன் தொகுதி 19, பக்கம் 13 - 14)

மற்றோர் இடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (நபிகள் நாயகம்) ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை உற்று நோக்கினால் அவர்கள் ஒப்பிடயிலாத தன்மை பெற்றவரும் தூய உள்ளம் உடையவரும் இறைவனுக்காக உயிரை இழக்கத் தயாராக இருந்தவரும் மக்களின் உதவி ஒத்தாசைகளை எதிர்பாராமல் இறைவனை மட்டும் நம்பி வந்தவருமாவார் என மிகத் தெளிவாக புலனாகிறது. இறைவன் மீதே அவர்கள் முழுமையாக நம்பிக்கை வைத்தார்கள். இறைவனின் விருப்பத்திற்காகவும், அவனது மகிழ்ச்சிக்காகவும் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டார்கள். ஓரிறை கொள்கையை உலகிற்கும் எடுத்துரைப்பதனால் என்னென்ன தீங்குகள் தமக்கு ஏற்படும் என்பதையும் இணை வைப்போரின் கைகளால் என்னென்ன துன்பமும், துயரமும் நேரும் என்பதையும் அவர்கள் சிறிதும் பொருட்படுத்துவதில்லை.

(பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயீன் தொகுதி 1, பக்கம் 111)

* * * * * * * *

# ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மகத்துவம்

## (மவ்லவி ஹஸ்ரத் ஷேர் அலி ஸாஹிப் (ரலி) அவர்கள்)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதில் முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பு ஒரு மாபெரும் அடையாளம் ஆகும். அன்னாருடைய மேலும் பல அடையாளங்கள் ஹுஸூர் (அலை) அவர்களின் துஆ மூலமாக வெளிப்பட்டன. உதாரணமாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு வலுவான அடையாளமாக தன் இருப்பின் அடிப்படையில் லேக்ராம் பற்றிய அடையாளம் இருக்கின்றது தான். ஆயினும், முஸ்லிஹ் மவ்வூத் அடையாளம் வெளிப்பட்டது என்பது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட துஆக்களில் மிகப் பெரிய வித்தியாசத்தை கொண்டதாக இருக்கின்றது. இந்த அடையாளத்திற்காக ஹுஸூர் (அலை) அவர்கள் சிறப்பான ஏற்பாட்டின் அடிப்படையில் 40 நாட்கள் தம்முடைய ஊரிலிருந்து வெளியூருக்குச் சென்று தனிமையில், உலகத்தில் இருந்து தம்மை துண்டித்தவாறு இறைவனின் சன்னிதியில் விழுந்து மன்றாடி பிரார்த்தனை மற்றும் திக்ரில் மூழ்கி இருந்தார்கள். இதன் நல்விளைவாக இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்காக தன்னுடைய அருளின் அடையாளத்தை வழங்கினான். துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுதலின் நல்விளைவாக வேறு பல அடையாளங்களும் வெளிப்பட்டன. அவை அனைத்தும் தத்தமது இடத்தில் சிறப்பிற்குரியது தான். ஆனால் இந்த அடையாளத்தின் விளைவு எவ்வாறு விரிவானதாக இருக்கின்றது என்றால் அதை கணிப்பது சாத்தியமற்றதாகும்.

இவ்வாறான அடையாளங்கள் உலகத்தின் வரலாற்றில் துஆவின் மூலமாக மூன்று முறை வெளிப்பட்டிருக்கின்றன.

(1) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வருகையின் அடையாளம். அது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் துஆவின் விளைவால் வெளிப்பட்டது ஆகும். இந்த அடையாளம் தலைப்பின் அடிப்படையில் முதல் தரத்தை கொண்டதாக உள்ளது.

(2) இரண்டாவது அடையாளம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வெளிப்பாடு ஆகும். அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடைய சமுதாயத்திற்காக செய்த துஆவினால் வெளிப்பட்டதாகும்.

(3) துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலின் விளைவினால் உலகில் வெளிப்பட்ட மகத்துவ மிக்க மூன்றாவது அடையாளம் என்பது முஸ்லிஹ் மவ்வூத் அவர்கள் வெளிப்பட்ட அடையாளம் ஆகும். இந்த அடையாளம் தன்னுடைய மகத்துவத்தின் அடிப்படையில் மூன்றாவது இடத்தில் இருக்கின்றது.

இந்த மூன்றாவது துஆவின் விளைவினால் பிறக்கக் கூடிய அந்த மனிதர் எவ்வளவு பெரும் மகத்துவ மிக்கவராக இருக்கின்றார்! இதனை பல நாட்கள் செய்யப்பட்ட துஆவிற்கு பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் மீது ஹோஷியார்பூரில் இறங்கிய இறைவனுடைய அந்த வார்த்தைகளிலிருந்து நாம் கணித்துக் கொள்ள முடியும். அது பிப்ரவரி 20-ம் தேதி பிரசுரமாக வெளியிடப்பட்டது. இறைவனுடைய வார்த்தைகளில் மிகைப்படுத்துதல் இருக்க முடியாது.

ஆகையால், நாம் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மகத்துவத்தைக் குறித்து சரியாக கணிக்க வேண்டும் என்றால் நாம் அந்த முன்னறிவிப்பை படித்துப் பார்க்க வேண்டும். முன்னறிவிப்பில் அந்த மனிதருடைய பண்புகள், சிறப்பம்சங்கள், பணிகள் ஆகியவை படம் பிடித்து காட்டப்பட்டுள்ளன. ஆகையால், ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) ஆகியோருக்கு பிறகு துஆவின் மூலமாக உலகத்தில் வெளிப்பட்ட மூன்றாவது மகத்துவ மிக்க மனிதர் முஸ்லிஹ் மவ்வூத் ஆவார்கள்.

அவரைக் குறித்து முன்னறிவிப்பின் சொற்களில் கூறப்பட்டுள்ளன. அந்த முன்னறிவிப்பிற்கு உரியவர் ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி)அவர்களைத் தவிர வேறு எவரும் இல்லை என்பது அடையாளங்கள் மற்றும் ஆதாரங்கள் மூலமாக நிரூபணம் ஆகுவது மட்டுமல்லாமல் உரத்த குரலில் இறைவனுடைய அருட்களும் இந்த விஷயத்திற்கு சாட்சி பகர்ந்து கொண்டிருக்கின்றன. ஏனெனில், அல்லாஹ் தன்னுடைய வல்லமையின் வெளிப்படுத்தும் விதமாக அந்த முன்னறிவிப்பில் கூறப்பட்டிருந்த அனைத்து விஷயங்களையும் ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு ஆதரவாக எவ்வாறான விதத்தில் முழுமைப்படுத்தினான் என்றால் மேலும் முழுமைப்படுத்திக் கொண்டிருக்கின்றான் என்றால் அதை எந்தவொரு நடுநிலையான மனிதனாலும் மறுக்க இயலாது. இதில் உள்ள அனைத்து விஷயங்களையும் முழுமைப்படுத்துவது என்பது மனிதனுடைய சக்திக்கு அப்பாற்பட்டதாகும். இறைவனால் தான் அவ்வாறு செய்ய முடியும். அவன் இந்த அனைத்து விஷயங்களையும் முழுமைப்படுத்தியவாறு இந்த முன்னறிவிப்பில் கூறப்பட்டிருந்த தோன்ற இருந்த அந்த நபர் மஹ்மூத் அவர்களே ஆவார்கள் என்று விண்ணிலிருந்து சான்று பகர்ந்தான். ஆகையால் ஒரு நபருடைய உண்மைத்துவத்திற்கான மிகப் பெரிய சான்று அல்லாஹ்வினுடைய செயல் சாட்சியமாகும். இந்த அடையாளம் இந்த இடத்தில் மிகவும் தெளிவான வடிவில் இடம் பெற்றிருக்கின்றது.

ஹஸ்ரத் மஹ்மூத் (ரலி) அவர்கள் முஸ்லிஹ் மவ்வூத் ஆவார்கள் என்பதற்கு மற்றுமொரு விஷயம் சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றது. அது அன்னாருக்கு முன்னர் தோன்றிய வாக்களிக்கப்பட்டவர்களுடன் இருந்த இறைவனுடைய நடைமுறை ஆகும். இறைவன் புறம் இருந்து வாக்களிக்கப்பட்டவர்கள் உலகத்தில் சீர்திருத்தத்திற்காக வந்து கொண்டே இருக்கின்றார்கள். அவர்கள் தொடர்பாக இறைவனின் நடைமுறையும் இவ்வாறு இருந்து வருகின்றது. அவருடைய சமுதாயத்தின் பிரபலமான நபர்கள் அவருக்கு எதிராக நிற்கின்றார்கள். மேலும், அவர்கள் அவரை செயல்பட விடாமல் தடுப்பதற்காக தங்களுடைய முழு முயற்சியையும் மேற்கொள்கின்றார்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய காலத்தின் மிகப் பெரிய மனிதன் ஃபிர்அவ்ன் ஆவான். அவன் அன்னாருக்கு எதிராக நின்றான். மேலும் அவன் ஹஸ்ரத் மூஸா (அலை) மற்றும் அன்னாருடைய சமுதாயத்தை அழிப்பதற்காக முயற்சி செய்தான். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய காலத்தில் யூதர்களில் மிகப் பெரிய நபராகவும், அவர்களுடைய தலைவனாகவும் ஒரு சூனியக்காரன் இருந்தான். அவனுடைய பெயர் காயிஃபா ஆகும். அவன் அன்னாரை தோல்வியுறச் செய்ய வேண்டும் என்பதற்காக முயற்சி செய்தான்.

ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் காலத்தில் மக்கா நகரத்தின் தலைவன் அபூஜஹில் இருந்தான். அவன் அன்னாரை எதிர்க்க வேண்டும் என்று எழுந்து நின்றான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் காலத்தில் முஸ்லிம்களின் தலைவனான மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி மற்றும் நஸீர் உசேன் தஹ்லவி போன்றோர் எதிர்ப்புக்கான மேடையில் ஏறி நின்றதன் காரணத்தினால் இறைவனுடைய இல்ஹாமில் ஃபிர்அவ்ன் மற்றும் ஹாமான் என்ற பெயர்களை பெற்றனர். இதேபோன்று இறைவனுடைய பழைய நடைமுறைக்கு ஏற்றவாறு மஹ்மூத் (ரலி) அவர்கள் எழும் நேரம் வந்தபோது, முந்தைய நல்லடியார்களின் காலத்தில் அவர்களின் காலத்து பெயர் தாங்கி நபர்கள் எதிராக நின்றது போன்று அப்பொழுது அஹ்மதிய்யா ஜமாஅத்தில் உயர் இடத்தில் இருந்த நபர்கள் அன்னாருக்கு எதிராக நின்றனர். இப்பொழுது நிற்க உள்ள நபர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் முன்னறிவிப்பு செய்த அதே வாக்குறுதி அளிக்கப்பட்ட நபர் ஆவார் என்று தங்களுடைய செயல் ரீதியாக அவர்கள் அறிவிப்பு செய்தனர்.

மேலும், ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் உண்மையான மகத்துவத்தை வெளிப்படுத்தும் ஒரு விஷயம் என்னவென்றால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றம் அன்னாரின்




பிறப்புடன் இணைந்துள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தொடர்பாக எவர்கள் எல்லாம் நல்லெண்ணம் கொண்டிருந்தார்களோ மேலும், அன்னாரின் எழுத்துகள் மற்றும் முன்னறிவிப்புகளின் அடையாளத்தால் எவர்கள் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்தார்களோ அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் படைப்பினத்தின் சீர்திருத்தத்திற்காக தோன்றியுள்ளார்கள் என்று எண்ணினர். அதனால் திரும்ப திரும்ப தங்களுடைய பைஅத்தில் எங்களை இணைந்து கொள்ளுங்கள் என்று அவர்கள் விண்ணப்பம் வைத்துக் கொண்டிருந்தனர். ஆனால், இப்பொழுது வரை பைஅத் வாங்க எனக்கு கட்டளை இல்லை என்று அன்னார் (அலை) அவர்கள் எப்பொழுதும் பதில் கூறிவந்தார்கள். மேலும், இறைவன் புறமிருந்து பைஅத் வாங்க கட்டளை வராத வரை நான் யாரிடமும் பைஅத் வாங்க மாட்டேன் என்றார்கள். ஆனால், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) பிறந்தபோது, அன்னாருக்கு பைஅத் வாங்க இறை இல்ஹாம் மூலம் கட்டளை வந்தது. மேலும்,

اِصْنَعِ الْفُلْكَ بِأَعْيُنِنَا وَوَحْيِنَا

என்ற இந்த வஹீ இறங்கியது. இவ்வாறு பிரசுரத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பிறந்த செய்தி வெளிப்பட்டது. மேலும், மக்களுக்கு பைஅத் செய்ய அழைப்பு விடுத்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அடிக்கல் நாட்டப்பட்டது.ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பிறக்காத வரை பைஅத்தின் பணியை இறைவன் காலதாமதாக ஆக்கினான். இவ்வாறு அன்னாரின் பிறப்பு நிகழ்ந்த உடன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அடிக்கல் நாட்ட கட்டளை வந்தது. இவ்வாறு அன்னாரின் பிறப்புடன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆரம்பம் நிகழ்ந்தது. இந்த வாக்களிக்கப்பட்ட மகனுக்கு இறைவனுடன் ஆழமான தொடர்பு உள்ளது என்பதன் சைகை இதில் இடம் பெற்றுள்ளது. ஏனெனில், இரண்டின் ஆரம்பமும் ஒன்றாக நிகழ்ந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் இருப்பு பின்னிப் பிணைந்துள்ளது. இரண்டையும் வெவ்வேறாக எண்ண முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இறுதியாக, நான் இந்த விஷயத்தையும் தெளிவுபடுத்தி விடலாம் என்று நினைக்கின்றேன். அதாவது நீங்கள் ஹஸ்ரத மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்; ஏனெனில், ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு அன்னாரின் மூலமாக நிறைவேறியுள்ளது; மேலும், அன்னாருடைய இருப்பு ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்திற்கு சான்றாக இருக்கின்றது; மேலும் அன்னாரின் மூலமாக நாம் இஸ்லாத்தின் எதிரிகள் மீது சான்றை முழுமைப்படுத்த முடியும் என்று நாங்கள் அஹ்மதி அல்லாத நபர்களிடம் கூறுகின்றோம். அதைப் போன்று கைர் முபாயீன் (பைஅத்திலிருந்து வெளியேறியவர்) களிடமும் நாங்கள் கூறுகின்றோம்; அல்லாஹ் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்கள் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஒரு மகத்துவ மிக்க முன்னறிவிப்பை நிறைவேற்றி உள்ளான்;மேலும் அன்னாரின் உண்மைத்துவத்திற்கு ஒரு வல்லமை மிக்க அடையாளத்தை வெளிப்படுத்தியுள்ளான்.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைத்துவத்தின் மீது நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று வாதிக்கின்ற உங்கள் மீது கடமையாகும். அதாவது நீங்கள் இந்த அடையாளத்தின் உண்மைத்துவத்தின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள்; மேலும், அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வல்லமை மிக்க முன்னறிவிப்பை தனித்தன்மை வாய்ந்த வடிவில் நிறைவேற்றியவாறு அன்னாருடைய உண்மைத்துவத்திற்கு எவ்வாறு ஓர் அற்புதமான சான்றை வழங்கியுள்ளான் என்பதை பாருங்கள்! என உலகத்திற்கு கூறுங்கள்! இது ஒரு வலுவான சான்று ஆகும். இதற்கு முன்பு இறை நேசத்துடனும், இறையச்சத்துடனும் சிந்திக்கக் கூடிய ஒவ்வொருவரின் கழுத்தும் குனிந்து விடுகின்றது. ஆனால் நீங்கள் காழ்ப்புணர்ச்சி மற்றும் பிடிவாதத்தின் காரணத்தினால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஒளி வீசக் கூடிய இந்த அடையாளத்தை மறுத்தீர்கள் என்றால், பின்னர் இறைவனின் பார்வையில் அந்த அஹ்மதி அல்லாதவர்களைப் போன்று நீங்களும் குற்றமிழைத்தவர்களாக இருப்பீர்கள். அதாவது, எந்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு நிறைவேறியதோ மேலும் எந்த மஸீஹ் மவ்வூதின் இருப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்திற்கு ஒரு வலுவான சான்றாகவும், சாட்சியாகவும் இருக்கின்றதோ அந்த மஸீஹ் மவ்வூதை அவர்கள் நிராகரித்து இறைவனின் பார்வையில் குற்றமிழைத்தவர்களாக ஆகியுள்ளனர். (பைகாமீகளாகிய) நீங்கள் இந்த வாக்களிக்கப்பட்ட சீர்திருத்த வாதியை நிராகரித்தால் பின்னர் அவர்களைப் போன்று நீங்களும் இறைவனின் பார்வையில் குற்றமிழைத்தவர்களாக ஆகிவிடுவீர்கள்.

(அல்ஃபஸ்ல் பிப்ரவரி 20, 1994 )

தமிழாக்கம்
மவ்லவி
எம். ஷஹாபுதீன்

* * * * * * * *




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india


**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரான அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனரும் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்**

நீங்கள் அல்லாஹ்வை தேட வேண்டும் என்றால் வறியவர்களின் உள்ளத்திற்கு அருகில் சென்று தேடுங்கள். இதன் காரணமாகத்தான் இறைத் தூதர்கள் ஏழ்மையின் ஆடையை அணிந்திருந்தார்கள். அதேபோன்று பெரிய சமுதாயத்தின் மக்கள் சிறிய சமுதாயத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம். மேலும் என்னுடைய குடும்பம் பெரியது என எவரும் கூற வேண்டாம். எல்லா வல்ல அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் என்னிடம் வரும்போது நீங்கள் எந்த சமுதாயத்தை சார்ந்தவர்கள் என நான் உங்களிடம் கேள்வி கேட்க மாட்டேன். மாறாக உங்களுடைய செயல் எவ்வாறாக இருந்தது? என்றுதான் நான் கேட்பேன். இவ்வாறே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தன்னுடைய மகளிடம், ஃபாத்திமாவே! எல்லாம் வல்ல இறைவன் இனத்தை குறித்து (நீ எந்த ஜாதி, இனம், சமூம் என்று) கேட்க மாட்டான். நீ ஏதாவது தவறு செய்திருந்தால் இறைத் தூதரின் மகள் என்ற காரணத்தினால் இறைவன் உன்னை மன்னிக்க மாட்டான் எனக் கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் பாகம் 3, பக்கம் 370)

மேலும் அன்னார் (அலை) கூறுகிறார்கள்: என்னுடைய ஜமாஅத்தார்கள் ஒருவர் மற்றவரை சிறியவர் என்றும் பெரியவர் என்றும் கருதுவது அல்லது ஒருவர் மற்றவர் மீது தற்பெருமை கொள்வது அல்லது தரக்குறைவான கண்ணோட்டத்துடன் காண்பதை நான் விரும்புவதில்லை. யார் பெரியவர்? யார் சிறியவர்? என இறைவனே அறிகின்றான். ஒரு சிலர் பெரியவர்களை (அந்தஸ்திலும், செல்வாக்கிலும் உயர்வானவர்களை) சந்திக்கும் போது மிகவும் கண்ணியத்துடன் நடந்து கொள்கின்றார்கள். ஆனால், எவர் ஏழையின் கூற்றை ஏழையின் நிலைமையில் நின்று கேட்கின்றாரோ எவர் ஏழையின் உள்ளத்தை மகிழ்விப்பாரோ எவர் ஏழையின் கூற்றுக்கு மதிப்பளிப்பாரோ எந்த நபருடைய நாவிலிருந்து பிறரை வேதனைப்படுத்தக் கூடிய வெறுப்பான வார்த்தைகள் வெளிவரவில்லையோ அந்த நபர் தான் உண்மையில் பெரியவர் (கண்ணியத்திற்குரிய நபர்) ஆவார். உங்கள் சகோதரர்களை இழிவானவர்களாக கருதாதீர்கள். ஒரே நீரூற்றிலிருந்து தண்ணீர் அருந்தும் போது எவருடைய பங்கில் அதிக நீர் இருக்கும் என்பதை யார் அறிவார்? கண்ணியமும், மகத்துவமும் உலக விதிமுறையின் அடிப்படையில் கிடைப்பதில்லை இறைவனுடைய பார்வையில் எவர் இறையச்சம் உடையவராக இருப்பாரோ அவர் பெரியவர் ஆவார்.

(மல்ஃபூஸாத், பாகம் 1, பக்கம் 22, 23)

* * * * * * * *

1- ம் பக்கத் தொடர்ச்சி.......
(காதியான் ஜல்ஸா ஸாலானா அறிக்கை - 2024)

அவர்களின் அடிமைத்துவத்தில் அன்னாரின் மார்க்கத்தைப் பரப்புவதற்காக வந்துள்ளேன். எனது உள்ளம் எல்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான அன்பு நிறைந்திருக்கின்றது.

எண்ணற்ற நூல்களிலும், தமது எழுத்துக்களிலும், தமது சொற்பொழிவுகளிலும், தமது சபைகளிலும் அன்னாரது தனிப்பட்ட வாழ்விலும் அன்னார் (அலை) இந்த விஷயங்களை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். அன்னார் (அலை) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான அன்பு மற்றும் நேசத்தை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்கள் என்றால் அதற்கான உதாரணம் உலகில் வேறெங்கும் காணக் கிடைப்பதில்லை.

ஆக இது தொடர்பாக நான் இன்று, அன்னாருடைய சில மேற்கோள்களை எடுத்து வைப்பேன். அதிலிருந்து அன்னாருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இருந்த அன்பு மற்றும் நேசத்தைக் குறித்த சில துளிகள் வெளிப்படுகின்றன. நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அல்லது அன்னாரை ஏற்றுக் கொண்டவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நபித்துவத்தை அவமதிக்கின்றனர் என்று எதிரிகள் அவதூறு கூறுகின்றனர். இது முற்றிலும் மோசமான அவதூறு மற்றும் பொய் குற்றச்சாட்டாகும்.

இதன் பிறகு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய பல்வேறு மேற்கோள்களை எடுத்துரைத்தார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இந்த அரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது என்னும் பெயருடைய (ஆயிரமாயிரம் அருட்களும், சாந்தியும் அவருக்கு உண்டாவதாக!) இறைத் தூதர் (ஸல்) எவ்வளவு உயர்வான தகுதியைக் கொண்ட இறைத் தூதர் ஆவார் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கின்றேன். அவருடைய உயரிய அந்தஸ்தின் எல்லையை கண்டறிய முடியாது. அவருடைய பரிசுத்தமாக்கும் தாக்கத்தைப் பற்றி அனுமானிப்பது மனிதனின் வேலையன்று. பிரித்தறியப்பட வேண்டிய முறையில் அவருடைய உயர் பதவி பிரித்தறியப்படவில்லை என்பது வருந்தத் தக்கதாகும். உலகிலிருந்து மறைந்த அந்த ஓரிறைமையை (தவ்ஹீதை) மீண்டும் உலகிற்கு கொண்டு வந்தவர் அந்த வீரர் ஒருவரே! அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற இரக்கத்தில் அவர் உயிரே உருகி விட்டது. எனவே அவருடைய உள்ளத்தின் இரகசியத்தை உணர்ந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும் - முன்னவர், பின்னவர் அனைவரை விடவும் சிறப்பினை வழங்கினான். மேலும் அவருடைய குறிக்கோள்களை அவர் வாழ்நாளிலேயே நிறைவேற்றினான்.

(ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின் தொகுதி 22, பக்கம் 118 -119)

மேலும் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஓர் இரவில் இந்த எளியவன் எந்த அளவிற்கு அதிகமாக துரூத் ஓதினேன் என்றால் அதனால் உயிரும், உள்ளமும் நறுமணமாகிவிட்டது. அதே இரவில் நான் கனவில் இவ்வாறு கண்டேன்: பரிசுத்தமான தண்ணீரின் வடிவில் ஒளிகளைக் கொண்ட குவளைகளை வானவர்கள் இந்த எளியவனின் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு வருகின்றனர். மேலும், அவர்களில் ஒருவர் கூறினார்: நீர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்காக வேண்டிய அருட்கள் இவையே ஆகும்....... இதற்கிடையில் கனவில் நான் கண்டேன். அதாவது மக்கள் உயிர் கொடுப்பவரை தேடி திரிந்துக் கொண்டிருந்தனர். மேலும் ஒரு நபர் இந்த எளியவனுக்கு முன்னால் வந்தார். மேலும் சைகை செய்தவாறு

هٰذَا رَجُلٌ يُحِبُّ رَسُوْلَ اللهِ

என்று அவர் கூறினார். அதாவது இந்த நபர் யாரென்றால் இவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மீது நேசம் கொண்டிருக்கின்றார். இந்தக் கூற்றின் பொருள் இவ்வாறாக இருந்தது. அதாவது அந்தப் பதவிக்கான மகத்தான நிபந்தனை என்பது இறைத் தூதர் (ஸல்) மீதான நேசம் ஆகும். ஆக அது இந்த நபரிடம் ஒன்றுபட்டுள்ளது.

(பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 4, ரூஹானீ கஸாயீன், தொகுதி 1, பக்கம் 598)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இக்காலத்திலும் கூட என்னவெல்லாம் வல்ல இறைவனின் அருட்களும், பயன்களும் இறங்கிக் கொண்டிருக்கின்றனவோ அவை அன்னார் (ஸல்) அவர்களுக்கு கீழ்படிந்து நடத்தல் மற்றும் அன்னாரை முழுமையாக பின்பற்றுவதனால் மட்டுமே கிடைக்கின்றன. நான் மெய்யாக கூறுகின்றேன். மேலும் எனது அனுபவத்தால் கூறுகின்றேன்; அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் கீழ்படிதலில் மூழ்கி விடாத வரை எந்தவொரு நபரும் உண்மையான நன்மையை மேற்கொள்ளக் கூடியவராகவும், இறை திருப்தியை பெறக் கூடியவராகவும் திகழ முடியாது. மேலும் உயர்தரமான ஆத்ம பரிசுத்தத்திற்குப் பிறகு கிடைக்கக் கூடிய ஆன்மிகக் காட்சிகளையும் பெற முடியாது. மேலும் அதற்கான சான்று அல்லாஹ்வின் வேதத்திலிருந்து கூட கிடைக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான்:

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللهَ
فَاتَّبِعُوْنِي يُحْبِبْكُمُ اللهُ

பொருள்:

நீர் அவர்களிடம் கூறுவீராக! (மக்களே!) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போது தான்) அல்லாஹ்(வும்) உங்களை நேசிப்பான்.

(ஆலி இம்ரான்: 32)

மேலும் இறைவனுடைய இந்த வாதத்திற்கான செயல் சாட்சியமாகவும், உயிருள்ள சான்றாகவும் நான் இருக்கின்றேன். இறை நேசர்கள் மற்றும் வலிமார்களுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள அந்த அடையாளங்களுடன் என்னை அடையாம் கண்டு கொள்ளுங்கள்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 132)

ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் ஸாஹிப் கூறுகின்றார்கள்: ஒரு முறை நிகழ்ந்த சம்பவமாகும். அதாவது மஸ்ஜித் முபாரக் என்றழைக்கப்படும் தமது வீட்டுடன் இணைந்திருக்கும் சிறிய மஸ்ஜிதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனியாக உலாவிக் கொண்டிருந்தார்கள். மேலும் மெது மெதுவாக ஏதோ முனு முனுத்துக் கொண்டிருந்தார்கள். அத்துடன் அன்னாருடைய கண்களிலிருந்து கண்ணீரும் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அந்நேரத்தில் அன்னார் (அலை) ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்களின் கவிதையை படித்துக் கொண்டிருந்தார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின்போது ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்கள் அந்தக் கவிதையை கூறியிருந்தார்கள்:

كُنْتَ السَّوَادَ لِنَاظِرِيْ فَعَمِيَ
عَلَيْكَ النَّاظِرُ
مَنْ شَاءَ بَعْدَكَ فَلْيَمُتْ
فَعَلَيْكَ كُنْتُ أُحَاذِرُ

பொருள்:

நீர் எனது கண்ணின் கரு விழியாய் இருந்தீர். இன்று உமது மரணத்தின் காரணத்தால் அது குருடாகி விட்டது. இனி உமக்குப் பிறகு எவர் வேண்டுமானாலும் மரணித்துக் கொள்ளட்டும்; எனக்கோ உமது மரணத்தைப் பற்றியே அச்சம் இருந்தது. அதுவோ நிகழ்ந்து விட்டது.

நான் பதற்றமடைந்தவாறு கூறினேன்: ஹஸ்ரத், இது என்ன விவகாரம்? மேலும் ஹுஸுருக்கு என்ன துன்பம் ஏற்பட்டுள்ளது? என்று நான் வினவினேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் தற்போது ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்களுடைய இந்தக் கவிதையை படித்துக் கொண்டிருந்தேன். மேலும், அந்தோ! இந்தக் கவிதை எனது நாவிலிருந்து வெளிப்பட்டிருக்கக் கூடாதா! என்று எனது உள்ளத்தில் இந்த ஆசை உருவாகிக் கொண்டிருந்தது.

இறுதியில் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்:

அல்லாஹ் முஸ்லிம் சமுதாயத்திற்கு அறிவையும், புரிதலையும் வழங்குவானாக! மேலும், வீணான எதிர்ப்பிலிருந்து அவர்கள் விலகிக் கொள்ளட்டுமாக! மேலும், சிந்திக்கட்டுமாக! நீங்கள் எவ்வித ஆய்வும் செய்யாமல் ஏன் எதிர்த்தீர்கள்? என்று அல்லாஹ் அவர்களிடம் கேட்க மாட்டானா? என்று சிந்திக்க வேண்டும். ஏனெனில், பெரும்பாலானவர்கள் ஆய்வு செய்யாமலேயே மவ்லவி கூறியதன் அடிப்படையில் (நம்மை) எதிர்க்கின்றனர். சற்று சிந்தியுங்கள்.

மேலும் இவர்கள் இவ்வாறு சிந்திப்பதற்கு அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவை வழங்குட்டுமாக! மேலும், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீது நாங்கள் நேசம் கொள்கின்றோம் என்று நாமோ வாதம் செய்கின்றோம். எனவே இந்த வாதத்தை நாம் நமது செயல்களால் நிரூபணம் செய்யக் கூடிய நற்பேறை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! மேலும் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீது நாம் கொண்டுள்ள அன்பும், நேசமும் வெறும் வாய் பேச்சளாக இல்லாமல் அதில் நாம் முன்னேறிக் கொண்டே செல்வோமாக!

இன்னும் கூறப்போனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை ஏற்றுக்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 THU 27 FEBRUARY 2025 Issue No - 09

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கொண்டுள்ள நாம் அன்னாரை ஏற்றுக் கொண்டதற்கான உரிமையை செலுத்தக் கூடியவர்களாக திகழ்வதற்கு அல்லாஹ் நற்பேறு வழங்குவானாக! மேலும் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான அன்பிலும், நேசத்திலும் மிகவும் உன்னதமான தரத்தை நிலைநாட்டக் கூடியவர்களாக இருப்போமாக! உங்களை நீங்களே ஆய்வு செய்து வாருங்கள். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத்( அலை) அவர்களிடம் என்ன உணர்வுகள் இருந்தனவோ அந்த உணர்வுகள் நமது உள்ளங்களில் உருவாகிக் கொண்டிருக்கின்றனவா? என்று பரிசோதித்து வாருங்கள். அல்லாஹ்வின் ஏகத்துவத்தை உலகில் நிலைநாட்டுவதற்காக நம்மிடம் எதிர்பார்க்கப்படும் அந்த முயற்சிகளை செய்ய வேண்டும். அதற்கான உரிமையை நிறைவேற்ற வேண்டும். மேலும் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் கொடி உலகில் பறப்பதற்காக எல்லாத் தியாகங்களுக்காகவும் தயாராக இருங்கள். அல்லாஹ்வின் ஏகத்துவத்தை உலகில் நிறைவேற்றுவதற்காக எல்லா தியாகங்களுக்காகவும் தயாராக இருங்கள். மேலும் அந்த நோக்கத்தை அடைந்திடாத வரை நீங்கள் நிம்மதியாக அமராதீர்கள். அவற்றை முழுமை செய்வதற்காகவே நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்திருக்கின்றோம்.

அல்லாஹ் காதியான் ஜல்ஸாவில் கலந்து கொள்ளக் கூடிய ஒவ்வொரு நபரையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக! மேலும், எவர்கள் தமது வீட்டில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருக்கின்றார்களோ அவர்களையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக! மேலும் உண்மையான ரீதியில் இஸ்லாமிய போதனையின்படி அமல் செய்வதற்கும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அன்பு மற்றும் நேசத்தை வெளிப்படுத்துவதற்கான நற்பேறை வழங்குவானாக. மேலும் நாம் நமது பைஅத்திற்கான உரிமையை செலுத்தக் கூடியவர்களாக இருப்போமாக!

தற்போது நமது காதியான் ஜல்ஸாவுடன் உலகின் பல்வேறு நாடுகளில் ஜல்ஸா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் தூதுச் செய்தியை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், உலகில் அதனை பரப்ப வேண்டும் என்பதற்காகவும் தங்களை சீர்திருத்திக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதற்காகவும் இவர்கள் அனைவரும் இங்கு ஒன்றுகூடியுள்ளனர். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் அதற்கான நற்பேறை வழங்குவானாக! மேலும், எந்த அருட்களைப் பெறுவதற்காக இந்த ஜல்ஸாவில் அவர்கள் கலந்து கொண்டுள்ளார்களோ அந்த அருட்களை அவர்கள் அனைவரும் எடுத்துச் செல்லட்டுமாக!

தமிழாக்கம்

மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்**

தொலைந்து போன உண்மையை மீண்டும் உலகிற்கு கொண்டு வந்த நம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையை வெளிப்படுத்துவதில் ஒரு மகத்தான சீர்திருத்தவாதியாக இருந்தார்கள். நம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இணையாக வேறு எந்த நபியும் இருந்ததில்லை. அன்னார் (ஸல்) முழு உலகமும் ஓர் இருளில் இருப்பதைக் கண்டார்கள். அன்னார் (ஸல்) எந்த சமுதாயத்திடம் தோன்றினார்களோ அந்த சமுதாயத்தில் இருந்த அனைவரும் இணை வைத்தல் என்ற ஆடையைக் களைந்து விட்டு ஏகத்துவத்தின் ஆடையை அணியாத வரை அன்னார் (ஸல்) மரணிக்கவில்லை. அந்த அளவோடு மட்டும் அல்லாமல் அந்த மக்கள் ஈமானின் உயர்ந்த அந்தஸ்தையும் அடைந்தனர். உண்மை, பற்று, நிச்சய உறுதி ஆகியவற்றால் வெளிப்பட்ட அந்தப் பணிகளுக்கு ஈடான ஒன்றை உலகின் எந்தப் பகுதியிலும் காணமுடியவில்லை. இன்னும் கூறப்போனால் இந்த அளவிலான வெற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எந்த நபிக்கும் கிடைக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்திற்கு ஒரு மாபெரும் சான்றாகும். எத்தகைய ஒரு காலத்தில் அன்னார் (ஸல்) தோன்றினார்கள் என்றால் அக்கால கட்டம் இருளில் வீழ்ந்து கிடந்தது. பொதுவாகவே ஒரு மகத்தான சீர்திருத்த வாதியை அது வேண்டி நின்றது. பிறகு அன்னார் (ஸல்) உலகை விட்டு பிரிந்த சமயத்தில் லட்சக்கணக்கான மக்கள் இணை வைத்தல் மற்றும் சிலைகளை வணங்குதல் ஆகியவற்றை விட்டு ஏகத்துவம் மற்றும் நேரான வழியை பேணுபவர்களாக ஆகியிருந்தனர். உண்மையிலேயே இந்த முழுமையான சீர்திருத்தம் அவர்களுக்கு உரிய சிறப்பாக இருந்தது. அதாவது அன்னார் (ஸல்) ஒரு சமுதாயத்தை காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கையை நடத்துபவர்களாகவும், விலங்குகளின் இயல்பை கொண்டவர்களாகவும் இருப்பதைக் கண்டு அவர்களுக்கு மனித பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுத்தார்கள். வேறு சொற்களில் கூறுவதாக இருந்தால் இவ்வாறும் கூறலாம்: அதாவது விலங்குகளை மனிதர்களாக ஆக்கினார்கள். பின்னர் மனிதர்களை கல்வி அறிவுடைய மனிதர்களாக மாற்றினார்கள். பிறகு கல்வியறிவுடைய மனிதனை இறைவனோடு தொடர்பு கொண்ட மனிதர்களாக ஆக்கினார்கள். மேலும் ஆன்மிகத்தின் தன்மையை அவர்களிடத்தில் அன்னார் (ஸல்) ஊதினார்கள். உண்மையான இறைவனுடன் அவர்களுக்கு தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அவர்கள் இறைவழியில் ஆடுகளைப் போன்று பலியிடப்பட்டனர். எறும்புகளைப் போன்று கால்களுக்கு கீழ் நசுக்கப்பட்டனர். ஆயினும் அவர்கள் ஈமானை கைவிடவில்லை. மாறாக, ஒவ்வொரு துன்பத்தின்போதும், அவர்கள் பாதங்களை முன்நோக்கி வைத்தனர். எனவே சந்தேகத்திற்கிடமின்றி நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆன்மிகத்தை நிலைநாட்டுவதின் அடிப்படையில் இரண்டாவது ஆதமாக இருந்தார்கள். இன்னும் கூறப்போனால் அவர்கள் உண்மையிலேயே ஆதம் ஆவார்கள். அவர்கள் மூலமாகவும் அவர்களின் ஊடகமாகவும் தான் எல்லா மனித சிறப்புகளும் அதன் முழுமையை அடைந்தன. எல்லா நல்ல ஆற்றல்களும் தத்தமது பணியில் ஈடுபட்டன. மனித இயல்பின் எந்தவொரு கிளையும் அவர்களிடமிருந்து பயனடையாமல் இருந்ததில்லை. அன்னாரது நீரால் செழிப்படையாமல் இருந்ததில்லை. நபித்துவம் காலத்தின் அடிப்படையில் மட்டும் அன்னார் மூலம் நிறைவடையவில்லை. காலத்தின் பின்னால் வந்ததுடன் மட்டும் அன்னாருடன் நபித்துவம் முழுமை பெறவில்லை. இன்னும் கூறப்போனால், அவர்கள் மூலமாகவே நிறைவு பெற்றிருப்பது இதற்கான காரணமாக இருக்கின்றது. ஏனெனில், அனைத்து இறைப் பண்புகளின் வெளிப்பாடாக அன்னார் (ஸல்) இருந்தார்கள். எனவே அவர்களுடைய ஷரீஅத் அதாவது மார்க்க சட்டமானது கம்பீரமான மற்றும் மென்மையான இரண்டு நிலைகளை தன்னகத்தே கொண்டதாக இருக்கின்றது. அன்னாருக்கு முஹம்மது மற்றும் அஹ்மது என்ற இரண்டு பெயர்கள் இருந்ததற்கும் இதுவே காரணம் ஆகும். அவர்களின் பொதுவான நபித்துவத்தின் எந்தவொரு பகுதியும் கருமித்தனத்தைக் கொண்டதாக இருக்கவில்லை. மாறாக துவக்கத்திலிருந்தே முழு உலகிற்கும் உரியதாகவே இருந்தது.

(லெக்சர் சியால்கோட் ,ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 206 )

* * * * * * * *

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad